# உதயன்

விலை ரூபா 6.00

சுடர்:16 வள்ளுவர் ஆண்டு 2032 தை 26 வியாழக்கிழமை (08-02-2001) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:73




யாழ்.மாவட்ட அமெச்சூர் மெய் வன்மைச் சங்கமும், சர்வதேச அமெச சூர் மெய்வன்மைச் சம்மேளனத்தின் (IAAF) இலங்கைப் பயிற்சியாளர் சங் கமும் இணைந்து நடத்திய பயிற்சி முகாம் யாழ். மத்திய கல்லூரியில் நடைபெற்றது. இதன் இறுதிநாளான நேற்றுமுன்தினம் நடந்த சான்றிதழ் வழங்கும் வைபவத்தை 513 ஆவது பிரிகேட் தளபதி மேஜர் ஜெனரல் லால் பெரேரா மங்களவிளக்கேற்றி ஆரம்பித்து வைப்பதையும் 51ஆவது படையணியின் தளபதி மேஜர் ஜென ரல் காமினி ஜெயசுந்தர, இலங்கை பயிற்சியாளர் சங்கத்தின் செயலாளர் ஐ.சு.எஸ்.பாலசூரியா ஆகியோர் உரை யாற்றுவதையும் படங்களில் காண லாம். (ஐ-5)

# அடுத்த இரண்டு வாரங்களில் பேச்சை ஆரம்பிக்க வாய்ப்பு!

## தம்பலகாமத்தில் தேடுதல்

திருகோணமலை,பெப்.8

திருகோணமலை மாவட்டத்தில் தம்பலகாமம், கள்ளிமேடு ஆகிய பகுதிகள் நேற்றுக் காலை முதல் படையினரால் சுற்றிவளைக்கப்பட்டு தேடுதல் நடத்தப்பட்டது.

வீடு வீடாகச் சென்ற பொலீஸாரும் இராணுவத்தினரும் குடும்பப் பதிவு அட்டைகளைப் பார்வையிட்டதுடன் பொலீஸ் பதிவுச் சான்றிதழ்கள் வைத் திருக்காதவர்களை விசாரணைக்கு உட்படுத்தினர். எனினும் எவரும் கைது செய்யப்படவில்லை.(ஐ-7-145)

## சொல்ஹெய்ம் வந்ததும் திகதி நிர்ணயிக்கப்படும்

கொழும்பு,பெப்ரவரி8.

**விடுதலைப் புலிகளுடனான சமாதானப் பேச்சுக் கள் அடுத்த இரு வாரங்களில் ஆரம்பிக்கப்பட லாம் என்று சிரேஷ்ட அமைச்சர் ஒருவர் தகவல் வெளியிட்டிருக்கிறார்.**

**ஓரிரு தினங்களில் கொழும்பு வரவுள்ள நோர்வே யின் விசேட தூதர் எரிக் சொல்ஹெய்ம் பேச்சுக் கான ஆரம்ப திகதியை நிர்ணயிப்பார் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.**

சமாதான முயற்சிகளின் தற்போ தைய நிலைவரம் தொடர்பாக கேட்டபோதே அமைச்சர் இத்தகவல் களை வெளியிட்டிருக்கிறார்.

அவர் மேலும் தெரிவித்ததா வது:-

அடுத்த இரு வாரங்களில் இரண்டு தரப்புகளுக்கும் - அரசுக் கும் புலிகளுக்கும் - இடையில் பேச் சுக்கள் ஆரம்பமாகும்.

ஓரிரு தினங்களில் சொல்ஹெய்ம்

(12ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளைத் தடை செய்வதை பிரிட்டிஷ் அரசு ஒத்திவைக்கும்?

கொழும்பு,பெப்.8

நோர்வே அரசு மேற்கொண்டு வரும் சமாதான முன்முயற்சிக ளைக் கருத்தில்கொண்டு விடுதலைப் புலிகள் அமைப்பைத் தடைசெய் யும் முடிவை பிரிட்டிஷ் அரசு சிறிது காலத்துக்கு ஒத்திவைக்கலாம் என்று எதிர்பார்க்கப்படுவதாக அங்கிருந்து வெளியாகும் தகவல்கள் தெரிவிக் கின்றன.

சமாதானத் தீர்வு ஒன்றுக்கான வாய்ப்பான சூழல் உருவாகியுள்ள இந்தக் கட்டத்தில் விடுதலைப் புலி கள் அமைப்பை பயங்கரவாத அமைப் புகளின் பட்டியலில் சேர்த்துக்கொள் வதைத் தவிர்ப்பதற்காக பிரிட்டிஷ் வெளிவிவகார அமைச்சு அந்நாட்டு உள்துறை அமைச்சுக்கு ஆலோசனை வழங்கி வருவதாக லண்டன் தக வல்கள் தெரிவிக்கின்றன.

பயங்கரவாத அமைப்புக்களை கட்டுப்படுத்தும் புதிய சட்டங்கள் பிரிட்டனில் அடுத்த வாரம் அமு லுக்கு வரவுள்ளன.

இந்தச் சட்ட விதிகளின் கீழ் பிரிட்டனில் செயற்படும் ஆறு அமைப் புகள் பயங்கரவாத அமைப்புக்கள் என்ற பட்டியலில் சேர்க்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. அந்த ஆறு அமைப்புக்களில் விடுதலைப் புலிகள் இயக்கமும் சேர்க்கப்படக் கூடும் என்று கருதப்படுகிறது.

(12ஆம் பக்கம் பார்க்க)

## நாட்டில் சமாதானத்துக்கான நம்பிக்கை ஒளி தென்படுகிறது

### அமைச்சர் றொனி டிமெல் தெரிவிப்பு

கொழும்பு,பெப்.8

யுத்தம் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டு நாட்டில் சமாதான சூழ் நிலை உருவாகும் என்ற நம்பிக்கை ஒளிக்கீற்றுகள் தென்படுகின்றன.

தென் மாகாண, துறைமுகங்கள் அபிவிருத்தி அமைச்சர் றொனி டிமெல் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

கொழும்பு செய்தி ஏஜென்ஸி ஒன்றுக்கு வழங்கிய பேட்டியிலேயே அவர் இப்படிக் தெரிவிக்குள்ளார்.

"சமாதானத்துக்காக நீண்ட காலம் அயராது உழைத்து வருகி றேன். இதற்காக என்னைக் கொலை செய்ய பத்துக்கும் மேற்பட்ட தடவை கள் முயற்சிகள் மேற்கொள்ளப்பட் டன. முன்னாள் ஜனாதிபதி பிரேம தாஸவே இந்தக் கொலை முயற்சி களின் பின்னணியில் இருந்தார்.

"நான் எப்போதும் யுத்தத்துக்கு எதிரானவன். கொள்ளையின் மறு

(12ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளை பிரிட்டன் தடைசெய்தால் நோர்வே முயற்சியைப் பாதிக்கும்

### ஐரோப்பிய ஒன்றிய பிரதிநிதி கருத்து

லண்டன்,பெப்.8

விடுதலைப் புலிகளை பிரிட்டன் தடைசெய்தால் அது நோர்வே முன னெடுத்துள்ள சமாதான முயற்சிக ளில் பாதிப்பை ஏற்படுத்தும் என்று ஐரோப்பிய ஒன்றிய நாடாளுமன்றத் தைச் சேர்ந்த தொழிற்கட்சி உறுப் பினர் றொபேர்ட் ஈவன் தெரிவித்தார்.

லண்டன் தமிழ் ஒலிபரப்புக் கூட் டுத்தாபனத்துக்கு அளித்த பேட்டியி லேயே அவர் இதைத் தெரிவித்தார்.

அடுத்த இரு வாரங்களில் இலங்கை வரவிருக்கும் ஐரோப்பிய நாடாளுமன்ற உறுப்பினர் குழுவுக்கு தலைமை வகிக்கும் ஈவன் அந்தப் பேட்டியில் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கையுடன் ஐரோப்பிய ஒன் றியம் ஓரளவு தொடர்புகளையே தற் சமயம் வைத்திருக்கின்றது.

போர் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கும் நிலையில் -

(12ஆம் பக்கம் பார்க்க)

## அவசரகாலச் சட்ட விவாதம் இன்று

கொழும்பு,பெப்.8

அவசரகாலச் சட்டத்தை மேலும் ஒருமாத காலத்துக்கு நீடிப்பது தொடர்பான விவாதம் இன்று நாடா ளுமன்றத்தில் நடைபெறவுள்ளது.

பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் அனுருத்த ரத்வத்த பிரே ரணையை சமர்ப்பிப்பார். (ஐ-7)

## பல்கலைக்கழக மாணவர் கைதாகி விடுதலை

கொழும்பு,பெப்.8

பேராதனைப் பல்கலைக்கழக தமிழ் மன்ற வளர்ச்சிக்கான நிதி சேகரிப்பில் ஈடுபட்ட 10 பல்கலைக் கழக மாணவர்கள் நேற்றுக் கைது செய்யப்பட்டனர்.

நேற்று நண்பகல் அளவில் நார ஹேன்பிட்டி தொடர்மாடிக் கட்டடப் பகுதியில் இந்த மாணவர்கள் டிக் கெட் விற்றுக்கொண்டிருந்த சமயம் அங்குவந்த பொலீஸார் இவர்க ளைக் கைதுசெய்து பொலீஸ் நிலை யத்தில் தடுத்து வைத்ததாகத் தெரி விக்கப்பட்டது.

அகில இலங்கை தமிழ்க் காங்

(12ஆம் பக்கம் பார்க்க)

## கிளாலியில் தாக்குதல்

கொழும்பு,பெப்.8

படையினரால் புதிதாகக் கைப் பற்றப்பட்ட கிளாலிக்கு தெற்கே யுள்ள கரடியன்காட்டுப் பகுதியில் முன்னரங்க நிலைகளிலிருந்து நட வடிக்கை மேற்கொண்ட படையினர் விடுதலைப் புலிகளின் உறுப்பினர் ஒருவரைக் கொன்றுள்ளதாக விசேட ஊடகத் தகவல் நிலையம் தெரிவித் துள்ளது. (ஐ-10)

## பாதயாத்திரையின் நிறைவாக நாளை கொழும்பில் பெரும் ஆர்ப்பாட்டம்!

கொழும்பு,பெப்.8

கண்டியில் இருந்து ஞாயிறன்று ஐ.தே.கட்சி ஆரம்பித்த பாதயாத் திரை நாளை கொழும்பை வந்த டைந்ததும் மாபெரும் ஆர்ப்பாட்டம் கொழும்பில் இடம்பெறவுள்ளது.

கொழும்பு மாநகர சபைச் சதுக் கத்தில் இடம்பெறும் இந்த ஆர்ப் பாட்டத்தில் பெரும் எண்ணிக்கையா னவர்கள் கூடி அரசுக்கு எதிராக் குரல் எழுப்பவிருக்கின்றனர்.

கட்சியின் தலைவர் ரணில் விக் கிரமசிங்க தலைமையில் அங்கு இடம்பெறும் பொதுக்கூட்டத்தில் கட் சியின் முக்கிய தலைவர்கள் உரை யாற்றுவர்.

இதேவேளை -

நேற்று பாதயாத்திரை இடம் பெற்ற பகுதிகளில் பொதுமக்கள் திரண்டு ஆதரவு வழங்கினர். கஜூ வால் செய்யப்பட்ட மாலைகளை ரணிலுக்கு அணிவித்தனர். பின்னர் அந்தக் கஜூவை அவர் பொதுமக்க ளுக்கு வழங்கினார். (ஐ-3)

## மட்டு.காஞ்சிரங்குடா வாவியில் படகு கவிழ்ந்து நால்வர் பலி!

மட்டக்களப்பு,பெப்.8

மட்டக்களப்பு நகருக்குத் தென் மேற்கே பட்டிப்பளை பிரதேச செயல கப் பிரிவில் உள்ள காஞ்சிரங்குடா வாவியில் தோணி கவிழ்ந்து நான்கு பேர் பலியாகியுள்ளனர்.

இச் சம்பவம் செவ்வாய்க்கிழமை மாலை விடுதலைப் புலிகளின் கட் டுப்பாட்டிலுள்ள படுவான்கரையில் நிகழ்ந்துள்ளது.

படகைச் செலுத்திச் சென்ற இளை ஞரும் மூன்று குடும்பப் பெண்க ளுமே பலியாகியுள்ளனர்.

முனைக்காட்டைச் சேர்ந்த மனோ கரன் அசோகன் (வயது 19), சின்னத் தம்பி நல்லமுத்து (வயது 40), வேலப்போடி ஞானம்மா, கொத்தியா வலையைச் சேர்ந்த மாணிக்கப்போடி மேனகா (வயது 25) ஆகியோரே பலி யாகினர்.

காஞ்சிரங்குடாவிலிருந்து முனைக் காடு நோக்கி சிறிய தோணியில் சென்று கொண்டிருந்த போது தோணி கவிழ்ந்ததால் இந்த விபத்து நடந் துள்ளது.படகில் சென்ற அனைவரும் பலியாகியுள்ளதால் விபத்திற்கான காரணம் பற்றித் தெரியவரவில்லை என அக்கிராம மக்கள் தெரிவிக் கின்றனர்.

(12ஆம் பக்கம் பார்க்க)

## அறிவித்தல்

# ஜீ.ஜீ.பொன்னம்பலத்தின் 24 ஆவது நினைவு தினம்

**இடம்:** குருநகர் அமரர் ஜீ.ஜீ.பொன்னம்பலத்தின் சிலையின் முன்றலில்

**காலம்:** நாளை 09.02.2001 வெள்ளிக்கிழமை காலை 8 மணியில் இருந்து பொதுமக்களும் கட்சி அங்கத்தவர்களும் கலந்துகொள்ளுமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றோம்

*அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ்,*
*120, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.*

(83907)


BEACON
வெலிங்டன் சந்திக்கருகில்

யாழ்., பேராதனை
**G.A.Q, 1ST IN COM., B.A. PART I,II**
வகுப்புக்கள்

எமது வழமையான ஆசிரியர் குழு
ஆரம்பம்:- 10-02-2001
சனி காலை 9.00 மணி (ப.நே)
குறிப்பு:- பதிவுகள் எம்மால் செய்து தரப்படும்.
- நிர்வாகி.
(83894)


## மஹாயாகம்

இன்று (08-02-2001) வியாழக்கிழமை காலை ஸ்ரீ சீரணி நாகபூஷணி அம்மன் ஆலயத்தில் ஒரு **விசேட நவக்கிரக மஹாயாகம்** நடைபெறத் திருவருள் பாலித்துள்ளது. மேற்படி கிரியைகள் ஈச்சமோட்டை ஞானவைரவர் கோயில் பிரதம குருவும் தற்போதைய சீரணி அம்பாள் கோயில் பிரதம குருவும் ஆகிய கிரியாகலாபமணி தி. பாலசுப்பிரமணியக்குருக்கள் தலைமையில் பல சிவாச்சாரியார்கள் பங்குபற்றி நடைபெற உள்ளது. அடியார்கள் யாவரும் பங்குபற்றி அம்பாள் அருள் பெறுக.

நன்றி
சுபம் அஸ்து

*ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் தேவஸ்தானம்.*

(83901)

## சந்நிதியான் ஆச்சிரம வாராந்த நிகழ்வு

யாழ்ப்பாணம்,பெப்.8

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையினால் சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் ஒவ்வொரு வாரமும் வெள்ளிக்கிழமைகளில் நடைபெறும் வாராந்த நிகழ்வில் நாளை "சிறுத்தொண்டன் எனும் பெருந்தொண்டன்" என்ற தலைப்பில் சிவத்திரு.வ.குமாரசாமி ஐயர் சொற்பொழிவாற்றுவார். (ம)


## கலந்துரையாடல்

வரணி மகாவித்தியாலத்தின் பாடசாலை அபிவிருத்திச் சங்க செயற்குழு உறுப்பினர்களுக்கான அவசர கலந்துரையாடல் நாளை வெள்ளிக்கிழமை காலை 10.30 மணிக்கு கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி வீதியில் உள்ள எக்ஸலன்ற் கல்வி நிலையத்தில் இயங்கும் வித்தியாலயத்தில் நடைபெறும் என வித்தியாலய அதிபர் வே.நவரத்தினராசா அறிவித்துள்ளார். (ஐ-117)


ராஜா
யாழ்ப்பாணம்
விஜயகாந்த், தேவயானி, ரகுவரன், அம்பிகா மற்றும் பலர் நடிப்பில்
வல்லரசு
காட்சிகள்: 10.30, 2.30 (பு.நே.)
(C/15058)

நாகம்ஸ்
சுன்னாகம்
அர்ஜுன், ரம்பா, ரகுவரன், கபாலி நடிப்பில்
சுதந்திரம்
(நீல்ஸ்)
காட்சிகள்:11.00, 2.30 (புதிய நேரம்)
10.02.2001 முதல்
பெண்ணின் மனதைத் தொட்டு
(83856)


# அமரரின் முதலாம் ஆண்டு நினைவுகள்



**தோற்றம்** 16 - 07 - 1950

**மறைவு** 22 - 01 - 2000

எமது மாண்புமிகு இயக்குநர்

## க.ஆனந்தக்குமார் (BOND)

திதி: 08-02-2001

*தனியார் கல்வி நிறுவனங்களுக்கு*
*நீர் ஊற்றி வளர்த்தீர்*
*பாசமழை பொழிந்து அனைவரையும்*
*ஆட்கொண்டீர் ......*
*உன்னால் வாழ்ந்தவர்கள் பலர்*
*நித்தமும் உன் நினைவு ஐயா!*
*ஆண்டு ஒன்று கடந்தாலும், என்றும்*
*நீக்கமற நிற்பாய் எம் உள்ளத்தில்.....*

*யாழ்ப்பாணம்.*
T.P 075-515309

உங்கள் நினைவில் வாழும் குடும்பத்தினருடன்
**BOND கல்வி நிலையத்தினர்.**

(83891)

# சபிண்டீகரண அழைப்பும் நன்றி நவிலலும்

பிறப்பு 25-12-1941

இறப்பு 10-01-2001

## கந்தன் சண்முகலிங்கம்

(K.S லிங்கம் புடைவைப் பூங்கா உரிமையாளர், சுன்னாகம்.)

10-01-2001 அன்று அமரத்துவம் அடைந்த எனது கணவரின் மறைவுச் செய்தி அறிந்து உடன் வந்து உதவிய அன்பு உள்ளங்களுக்கும், இறுதிக் கிரியைகளிலும் நேரிலும் கலந்து கொண்டு அனுதாபச் செய்திகள் அனுப் பியும், எமது துயரில் பங்குகொண்ட அனைவருக்கும் எமது இதயம் நெகிழ்ந்த நன்றிகள். நாளை (09.02.2001) வெள்ளிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறவுள்ள சபிண்டீகரணக் கிரியைகளிலும் மதியபோசனத்திலும் கலந்துகொண்டு எனது அன்புத் தெய்வமாகிய கணவரின் ஆத்மசாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்குமாறு உங்கள் அனைவரையும் அன்புடன் வேண்டுகிறேன்.

*(தனிப்பட்ட அழைப்பு ஏதும் இல்லை)*

*S.T.N.Road,*
*Chunnakam.*

(C/15204)

**திருமதி ச.புஸ்பலீலா**
**(மனைவி)**

# கண்ணீர் அஞ்சலி



அமரர்

## தாமோதரம்பிள்ளை ஜெகந்நாதன்

(ஓய்வு பெற்ற பொலீஸ் அத்தியட்சகர், கணக்காளர் - நந்தினி நகை மாடம், யாழ்ப்பாணம்.)

06-02-2001 அன்று இறைபதம் அடைந்தவரின் பிரிவினால் துயரடைந்திருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் கண்ணீர்ப்பூக்களையும் காணிக்கையாக்கி ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

*திருநெல்வேலி,*
*யாழ்ப்பாணம்.*

(83900)

**அன்பர்கள்,**
**நண்பர்கள்.**

# மரண அறிவித்தல்கள்

## கனகராயர் மயூரநாதன்

மல்லாகத்தைப் பிறப்பிடமாகவும் கல்வயல் சாவகச்சேரியை வசிப்பிடமாகவும் கொண்ட கனகராயர் மயூரநாதன் நேற்று (07.02.2001) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற திரு.திருமதி கனகராயர் தம்பதிகளின் ஏக புதல்வனும், காலஞ்சென்ற திரு.திருமதி துரைச்சாமி தம்பதிகளின் மருமகனும், காலஞ்சென்ற இராஜேஸ்வரியின் அன்புக் கணவரும் சரோஜினிதேவி, (பிரான்ஸ்), சுசீலாதேவி, சொர்ணதேவி ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்றவர்களான சிவசுப்பிரமணியம் (அதிபர்), சொக்கநாதன் ஆகியோரின் அன்பு மைத்துனரும், உஷா, பிரபா, குமாரதாசன், சிவதாசன், ஸ்ரீரமணா, பிரகாமி ஆகியோரின் அன்பு மாமனுமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் நேற்று(07.02.2001) மல்லாகத்திலுள்ள அவரது இல்லத்தில் இடம்பெற்றுப் பூதவுடல் மல்லாகம் இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*பாடசாலை ஒழுங்கை,*
*மல்லாகம்.*

(83888)

தகவல்:
சொ.சொர்ணதேவி
(சகோதரி)

## செல்லையா சண்முகலிங்கம்

(பிரான்ஸ்)

**(முன்னாள் காசாளர், சங்கானை ப.நோ.கூ.சங்கம்)**

இலகடி சங்கானையைச் சேர்ந்தவரும் பிரான்ஸை வசிப்பிடமாகக் கொண்டவருமாகிய செல்லையா சண்முகலிங்கம் பிரான்ஸில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அம்பலவாணர் செல்லையா - புவனேஸ்வரி தம்பதிகளின் மகனும், கமலாதேவியின் அருமைக் கணவரும், வாசுகி, ஜானகி, தேவகி, முரளி ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், சுரேஸ் குமாரின் மாமனாரும் சங்கானையைச் சேர்ந்த நாகதீபன் பராசக்தி, காலஞ்சென்ற வல்லிபுரம் நல்லம்மாவின் அன்புச் சகோதரரும், புன்னாலைக்கட்டுவனைச் சேர்ந்த சொர்ணலிங்கம் இராசம்மாவின் மருமகனும், அபிலாஷினியின் பேரனுமாவார்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இலகடி,*
*சங்கானை.*

(C/15208)

தகவல்:
நா.நாகேஸ்வரன்
(மருமகன்)

# உதயன்

## மனம் விழிமின்!

யாழ்ப்பாணத்தில் கண் தான வங்கி ஒன்று அமைக்கப்படுவது அவசியம். அதற்கு முன்னோடியாகக் கண் தான சங்கம் ஒன்று உருவாக்கப்படுவதும் அவசரத் தேவை.

கடந்த புதன்கிழமை யாழ்ப்பாணம் போதனா ஆஸ்பத்திரியில் நடைபெற்ற புதிய கண் சத்திரசிகிச்சைக் கூடத் திறப்பு விழாவில், மேற்படி இரண்டின் அவசியமும் வலியுறுத்தப்பட்டது.

பேராசிரியர் அ. சண்முகதாஸ் இந்தக் கருத்தை முன்வைத்தார்.

அவரின் பின்னர் உரையாற்றிய செஞ்சொற்செல்வர் ஆறு. திருமுருகன் கண்தான சங்கம் ஒன்றை உருவாக்கும் ஏற்பாடுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என்ற நல்ல செய்தியை வெளியிட்டார்.

எண் சாண் உடம்புக்குச் சிரசே பிரதானம் என்றனர் நம் மூன்னோர். அந்தச் சிரசின் மிக முக்கிய உறுப்புகளில் ஒன்றாக விளங்குவது கண். கண் பார்வை இழந்தவர்கள் வாழ்வில் ஒளி இழந்தவர்கள் ஆகும் துரதிர்ஷ்டம் உண்டு.

தானம் என்பது வாழ்க்கையின் ஒரு செயலம்சமாக அமைவது. அது பல்வகைப்பட்டது. உடல் உறுப்புகளைத் தானம் செய்வதும் இந்நாளில் சிறப்புற்று வருகிறது. அந்த வரிசையில் கண் தானம் உலகளாவிய ரீதியில் பெருவழக்காகி விட்டது.

கண் தானத்தை ஊக்குவிக்கவும், அதற்கான ஒத்துழைப்பையும் ஆதரவையும் வழங்கவும் உலகின் எல்லாப் பகுதிகளிலும் கண் தான சங்கங்கள் இயங்கி வருகின்றன.

கொழும்பில் டாக்டர் ஹட்சன் சில்வா என்பவரால் ஆரம்பிக்கப்பட்ட கண்தான சங்கம் கடந்த நான்கு தசாப்தங்களாக அருஞ்சேவையாற்றி வருகிறது. வெளிநாடுகளில் பார்வை இழந்தோருக்கும், இங்கிருந்து கண்களை அனுப்பி பிரபல்யம் பெற்றுள்ளது.

எமது பிரதேசத்தில் அத்தகைய கண்தான சங்கம் ஒன்று இன்னும் இல்லாதது பெருங்குறையாகும். தாம் இறந்த பின்னர் கண்ணைத் தானம் செய்வதால் பெரும் புண்ணியம் சேர்கிறது என்பதனை எம்மில் பலரும் இன்னும் உணரவில்லை. இறந்த பின்னரும் தமது கண்கள் இன்னொருவருக்கு ஒளி தந்து அவருக்கு வாழ்வளிக்கும் என்பதனை நினைத்து ஒவ்வொருவரும் பெருமைப்படவேண்டும். ஆனால் அந்த உணர்வு எங்கள் மக்கள் மத்தியில் வளரவில்லை; இது கவலைக்குரியது.

மாற்றுக் கண் பெறுவதற்காக 78 பேர் கண்களை எதிர்பார்த்திருக்கிறார்கள் என்பது நோக்கற்பாலது.

இந்த நிலை மாற வேண்டும். கண் தானத்தின் சிறப்பையும் பெருமையையும் எமது மக்களுக்கு உணர்த்த வேண்டிய தேவை உண்டு. அதே போன்று கண் தானத்தை இலகுவாக்குவதற்கு அதற்கான வசதிகளும் செய்யப்பட வேண்டியது அவசியமாகிறது.

கண்தானம் செய்வதற்கு மனம் விரும்பிப் பதிவு செய்த ஒருவர் இறந்த சில மணி நேரத்தில் அவரது கண்ணைப் பெற்றுக் கொள்வதற்கான துரித வசதிகள் இன்றியமையாதவை.

கண்தான சங்கம் ஒன்று உருவாகிக் கொண்டிருப்பதால் மேற்கூறிய வசதிகளைச் செய்து மக்களுக்கு ஒளி கொடுக்கும் பெரும் தொண்டை ஆற்றும் என நம்பலாம். கண்தானத்தின் சிறப்பை உணர்ந்து மற்றவர்களுக்கு உதவும் தியாக சிந்தையுடன் எல்லோரும் மனம் விழிக்க வேண்டும். மனம் விழிமின்; கண் ஒளிதருமின்!

# ஷெரோன் இஸ்ரேலின் புதிய பிரதமராகத் தெரிவு

டெல் அவிவ், பெப். 8

இஸ்ரேலின் அடுத்த பிரதமராக லிகுட் கட்சித் தலைவர் ஏரியல் ஷெரோன் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

நேற்று முன்தினம் நடைபெற்ற பிரதமர் பதவிக்கான தேர்தலில் வெற்றி பெற்ற ஷெரோன் நேற்று நாட்டு மக்களுக்கு உரையாற்றினார்.

தற்சமயம் இஸ்ரேலுக்கு ஒற்றுமையான அரசு தேவை என்பதால் புதிய அரசில் எதிர்த்தரப்பினருக்கும் இடம் அளிக்கப் போவதாகவும், எல்லா மக்களின் பாதுகாப்பையும் அடிப்படையாகக் கொண்டு அரசு அமைக்கப்படும் என்றும் ஷெரோன் தனது உரையில் குறிப்பிட்டார்.

பலஸ்தீனர்கள் வன்முறையைக் கைவிட்டுப் பேச்சு நடத்த முன்வரவேண்டுமென்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

இதேசமயம் பிரதமர் பதவித் தேர்தலில் தோல்வி அடைந்த முன்னாள் பிரதமர் எகுட்பராக் தொழில் கட்சித் தலைவர் பதவியிலிருந்து விலகியுள்ளார்.

மேற்காசியாவில் அமைதியையும் உறுதிப்பாட்டையும் ஏற்படுத்தச் ஷெரோனுடன் இணைந்து பணியாற்றும் தருணத்தை எதிர்பார்ப்பதாக அமெரிக்க அதிபர் புஷ் கூறியுள்ளார்.

இஸ்ரேலின் புதிய அரசின் கீழ் அமைதி நடவடிக்கைகள் தொடரும் என்று நம்புவதாகப் பலஸ்தீனத் தலைவர் யசீர் அரபாத் நம்பிக்கை தெரிவித்தார்.

வலதுசாரித் தலைவரான ஷெரோன் பலஸ்தீனர்கள் குறித்துக் கடும் போக்கைக் கடைப்பிடித்து வந்தார். ஆனால் பிரதமர் தேர்தலின் போது அவரது கடும்போக்கைத் தணித்துக் கொண்டவராகச் ஷெரோன் காட்டிக் கொண்டார்.

இனிச் ஷெரோன் கடைப்பிடிக்கப்போகும் தன்மையைச் சார்ந்தே மேற்காசிய அமைதி நிலவரம் அமையும் என்று ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

அத்துடன், அமெரிக்காவின் புதிய அதிபரான புஷ் மேற்காசியப் பிரச்சினையில் ஷெரோனுடன் இணைந்து செயற்படுவதில் பிரச்சினைகளைச் சத்திக்க நேரிடும் என்றும் அவர்கள் கூறுகின்றனர். (ஒ-7)

## உலக அரங்கில்

### இந்திய சனத்தொகைக் கணக்கெடுப்பு

இந்தியாவில் சனத்தொகை கணக்கெடுப்புப் பணிகள் நாளை ஆரம்பமாகின்றன. 28 ஆம் திகதி வரை இப்பணிகள் தொடரும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இம்முறை சனத்தொகை மட்டும் கணக்கிடாமல் சமூக கலாசார ரீதியான கணக்கெடுப்புகள் மேற்கொள்ளப்படவுள்ளது.

### 9 பேர் காயம்

ரஷ்யத் தலைநகர் மொஸ்கோவில் பாதாள ரயில் நிலையம் ஒன்றில் குண்டு வெடித்ததில் 9 பேர் படுகாயமடைந்தனர்.

அலுவலகங்களிலிருந்து வீடு திரும்புவோரால் ரயில் நிலையம் நிறைந்திருந்த சமயம், மறைத்து வைக்கப்பட்டிருந்த குண்டுவெடித்ததாகக் கூறப்படுகிறது. [ஒ]

### 27 அகதிகள்

யாழ்ப்பாணத்திலிருந்து படகுகளில் சென்ற இலங்கை அகதிகள் மண்டபம் சிறப்பு அகதிகள் முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

இலங்கையிலிருந்து 3 படகுகளில் 27 அகதிகள் கடந்த திங்களன்று வந்ததாகவும்— அவர்களை தனுஷ்கோடியில் இருந்து 2 கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள அரிச்சல் முனை என்ற இடத்தில் இறக்கி விட்டு 3 படகுகளும் திரும்பி விட்டதாகவும்— அதிகாரிகள் கூறினர்.

# இந்தோனேசியாவில் எஸ்ரடாவுக்காக ஆஜராக சட்டத்தரணிகள் பின்னடிப்பு

பதவியில் இருந்து அகற்றப்பட்ட பிலிப்பைன்ஸ் முன்னாள் அதிபர் ஜோசப் எஸ்ரடா சார்பாக நீதிமன்றில் ஆஜராவதற்கு பிலிப்பைன்ஸ் சட்டத்தரணிகள் பின்னடித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

ஊழல் குற்றச்சாட்டுக்களை எதிர்நோக்கி உள்ள எஸ்ரடா தன் மீதான குற்றச்சாட்டுக்களுக்கு எதிராக வாதாட சட்டத்தரணிகளைத் தேடி வருகின்றார்.

அவரது முன்னாள் வழக்கறிஞர் ஹெய்மன் ஹொட்டூன் தானும் தனது சகாக்களும் வேலைப்பளு காரணமாகத் தொடர்ந்து எஸ்ரடாவுக்காக வாதாட முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக அறிவித்துள்ளார்.

இதனை அடுத்து புதிய சட்டத்தரணியைத் தேடும் முயற்சியில் எஸ்ரடா தீவிரமாக உள்ளார். ஆனால் அவர் சார்பாக நீதிமன்றில் ஆஜராக சட்டத்தரணிகள் பின்னடித்து வருவதாகக் கூறப்படுகின்றது. (ம-7)

# இந்தியாவின் ஜார்கண்டில் நிலக்கரிச் சுரங்கத்திலிருந்து சடலம் ஒன்று மீட்கப்பட்டது

ராஞ்சி, பெப். 8

'சுனாவர்' நிலக்கரிச் சுரங்கத்தில் இருந்து ஒரு சடலம் மீட்கப்பட்டுள்ளது.

இந்தியாவின் ஜார்கண்ட் மாநிலத்தில் வெள்ளநீர் உட்புகுந்ததால் சுரங்கத்தினுள் சிக்கிய 35 பணியாளர்களை மீட்கும் பணியில் ஈடுபட்டுள்ள கடற்படைச் சுழியோடிகள் வெள்ள நீரில் மூழ்கி உயிரிழந்திருந்த பணியாளர் ஒருவரின் சடலத்தை மீட்டு வெளியே கொண்டு வந்தனர்.

ஆனாலும் வெள்ள நீரின் ஊடாக சுரங்கத்தினுள்ளே செல்லும் சுழியோடிகளின் முயற்சிகள் தோல்வியடைந்துள்ளன.

இதனால் உயர்சக்தி கொண்ட 11 நீரிறைக்கும் இயந்திரங்கள் மூலம் சுரங்கத்தின் இரு புறங்களில் இருந்தும் வெள்ள நீரை வெளியேற்றும் பணி தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை சுரங்கத்தினுள் சிக்கியவர்கள் இப்போது பாதுகாப்பான இடத்தில் இருந்தாலும் பிராண வாயு கிடைக்காமல் மூச்சுத்திணறி இறந்திருக்கக் கூடும் என்று அஞ்சப்படுகிறது. (ஒ-7)

# 'ஷியா' பிரிவு முஸ்லிம்கள் இருவர் பாகிஸ்தானில் சுட்டுக்கொலை

பாகிஸ்தானில் மதமோதல் காரணமாக இருவர் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

கராச்சி நகரில் கடந்த திங்களன்று இந்தச் சம்பவம் நடந்துள்ளது.

தமது வீடுகள் அமைந்துள்ள பகுதியில் தெருவோரமாக நின்று கொண்டிருந்த 'ஷியா' பிரிவைச் சேர்ந்த இஸ்லாமியப் பிரமுகர்கள் மீது மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் தானியங்கித் துப்பாக்கியால் சரமாரியாகச் சுட்டனர். இதில் இரு 'ஷியா' பிரமுகர்கள் கொல்லப்பட்டனர்.

ஒரு வாரம் முன்னதாக கராச்சியில் 'சன்னி' பிரிவு இஸ்லாமியர்கள் 4 பேர் சுட்டுக்கொல்லப்பட்டதற்கு பழி வாங்கும் நடவடிக்கையாகவே இந்தச் சம்பவம் கருதப்படுகிறது.

பாகிஸ்தானில் சமீப காலமாக இஸ்லாமியப் பிரிவுகளிடையேமோதல்கள் அதிகரித்து வருவது குறிப்பிடத்தக்கது.

# தமிழகப் பெண்களின் தாலிகளுக்கு வதந்தியினால் வந்த சோதனை!

சென்னை, பெப். 8

இந்தியாவின் ஆந்திரா மாநிலத்தில் கிளம்பிய வதந்தியால் தமிழகப் பெண்களின் தாலிகளுக்கு சோதனை ஏற்பட்டது.

புகழ் பெற்ற திருப்பதிவெங்கடேஸ்வரர் கோயில் ஆந்திராவில் உள்ளது. இந்தக் கோயிலுக்கு செல்லும் பக்தர்கள் வெங்கடாஜலபதியைத் தரிசித்து விட்டு திருப்பதி அருகேயுள்ள திருச்சானூரில் வெங்கடேஸ்வரனின் துணைவியார் பத்மாவதித் தாயார் கோயிலுக்குச் சென்று தரிசிப்பது வழக்கம்.

கடந்த வாரத்தில் ஒரு நாள் மதியம் 12.30 மணியளவில் பத்மாவதித் தாயாரை தரிசிக்க கோயிலில் கூட்டம் அலை மோதிக் கொண்டிருந்தது.

அப்போது பத்மாவதித் தாயார் சிலையின் மீது கட்டப்பட்டிருந்த பொன் தாலி தானாக அறுந்து விழுந்து விட்டதாக வதந்தி பரவியது.

இதனால் பக்தர்களிடையே பெரும் பரபரப்புப் பரவியது. கடவுள் சிலையிலிருந்து தாலி அறுந்து விழுந்ததால், நாட்டில் பெண்களின் தாலிகளுக்கு — அவர்களது கணவரின் உயிர்களுக்கு — ஆபத்து ஏற்படும் என்றும் கூறப்பட்டது.

ஆந்திராவில் ஆரம்பித்த இந்த வதந்தி ஒரே நாளில் தமிழகத்துக்கும் பரவியது.

ஏற்கனவே குஜராத்தில் ஆயிரக் கணக்கானோர் இறந்தது பெண்கள் மனதில் மேலும் பதற்றத்தை ஏற்படுத்தியது.

இந்தப்பரபரப்பின் நடுவே, கணவர்களது உயிரைக் காப்பாற்ற பெண்கள் பச்சை நிற கண்ணாடி வளையல்களை அணிந்து கழுத்தில் உள்ள தாலிக்குப் பதிலாக புதிய தாலி ஒன்றைக் கட்டிக் கொள்ள வேண்டும் என்று பிராயச்சித்தம் கூறப்பட்டது.

மஞ்சள் கரைத்துத் தோய்த்த கயிற்றில் மஞ்சளை கட்டியே தமிழகத்தில் தாலியாக கட்டப்படுவதால், மாநிலம் முழுவதும் மஞ்சள் கயிற்றுத் தாலிக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டது.

திருவேற்காடு கருமாரி அம்மன், மதுரை மீனாட்சி அம்மன் என்று அம்மன் கோயில்களுக்கும் படையெடுத்த பெண்கள் தங்கள் கழுத்திலிருந்த தாலியை கோயில் உண்டியல்களில் காணிக்கையாக இட்டு விட்டு புதிய தாலிகளை வாங்கி கோயில்களில் வைத்து தத்தம் கணவரைக் கொண்டு கட்டிக்கொண்டதே தட்டுப்பாட்டுக்குக் காரணம் ஆகும்.

அத்துடன் பிராயச்சித்த வதந்திப்படி பச்சை நிற கண்ணாடி வளையல்களை வாங்கிக் கைகளில் அணிந்து கொண்டனர்.

10 வளையல்கள் ஒரு ரூபாவுக்கு விற்றது போய் ஒரு பச்சை வளையல் 10 ரூபாவுக்கு விற்கும் நிலை ஏற்பட்டதாகக் கூறப்படுகின்றது.

இதற்கிடையில் திருப்பதி தேவஸ்தான அதிகாரிகள், பத்மாவதித் தாயாரின் கழுத்தில் உள்ள தாலி அறுந்து விழவில்லை பத்திரமாக கழுத்திலேயே உள்ளது. தாலி அறுந்து விழுந்ததாகக் கூறப்படுவது வீண் வதந்தி அதனை யாரும் நம்ப வேண்டாம் சுயநலவாதிகள் சிலர் திட்டமிட்டுப் பரப்பிய வதந்தியே அது என்றெல்லாம் அறிவித்தல்கள் கொடுத்தனர்.

ஆனாலும் தமிழகப் பெண்கள் கணவர் மீது வைத்துள்ள பக்தியினால், பிராயச்சித்த கைங்கரியங்களை தொடர்வதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

## நாளை

தை 27

வெள்ளிக்கிழமை

திதி: பிரதமை

முற்பகல் 11.19 வரை.

நட்சத்திரம்: மகம்

முன்இரவு 7.09 வரை.

சுபநேரம்: 6.35 — 8.05

ராகுகாலம்: 11.05—12.35

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

## உதயவாக்கு

துன்பப்படும் மனிதனின் புத்திமதிகளை ஒரு நாளும் ஏற்காதே.

# வெளிமாவட்டங்களுக்குச் செல்ல பயண அனுமதி பெற்றோர் விவரம்

யாழ்ப்பாணம், பெப். 8 இம் மாதம் 6 ஆம் திகதி வரையும் வெளியிடங்களுக்குப் பயணம் செய்ய அனுமதி வழங்கப்பட்டோரின் இலக்கங்கள் பிரதேச செயலர் ரீதியாக வருமாறு:-

**சங்கானை**

(178732ஏ), (178732பி), (179182ஏ), (179344ஏ), (179344பி), (179344சி), (179344டி), (179370ஏ).

**சாவகச்சேரி**

(179616ஏ), (179616பி), (179616சி), (179616டி),

**கரவெட்டி**

(170675ஏ), (151753ஏ), (162446ஏ), (162446பி), (162446சி), (165010ஏ), (165283ஏ), (165284ஏ), (167962ஏ), (167962பி), (167962சி), (172457ஏ), (172457பி), (177825ஏ), (177890ஏ), (180403ஏ), (180491ஏ), (180574ஏ), (180574பி), (180574சி), (180574டி), (180574ஈ), (181058ஏ), (181135ஏ), (181152ஏ), (181152பி), (181372ஏ), (181373ஏ).

**கோப்பாய்**

[153531ஏ], 153531பி], (153531சி), [153531டி], [162700ஏ], [162700பி], [162700சி], [163767ஏ], [168342ஏ], [171103ஏ], [173201ஏ], [173201பி], [173218ஏ], [173218பி], [173349ஏ], [173349பி], [173350ஏ], [173350பி], [173358ஏ], (173358பி), (174209ஏ), (174209பி), (177293ஏ), (177293பி), (177412ஏ), (177412பி), (177412சி), (177412டி), (177413ஏ), (177413பி), (177413சி), (177436ஏ), (177471ஏ), (177471பி), (177471சி), (177487ஏ), (177488ஏ), (177488பி), (179516ஏ), (179519ஏ), (179586ஏ), (179586பி), (179593ஏ), (179613ஏ), (179613பி), (179613சி), (179632ஏ), (179632பி), (179639ஏ), (179639பி), (179640ஏ), (179679ஏ), (179679பி), (180624ஏ), (180632ஏ), (180632பி), (180632சி), (180 45ஏ), (180667ஏ), (180667பி), (180671ஏ), (180671பி), (180671சி), (180676ஏ), (180676பி), (180682ஏ), (180683ஏ), (180683பி), (180696ஏ), (180711ஏ), (180857ஏ), (180857பி), (180857சி), (180857டி), (180866ஏ), (180875ஏ), (180879ஏ), (180910ஏ), (180910பி),

**நல்லூர்**

(174018ஏ), (174018பி), (179533ஏ), (179557ஏ), (179558ஏ), (179597ஏ), (179597பி), (179597சி), (179598ஏ), (179598பி), (179598சி), (179598டி), (179599ஏ), (179599பி), (179599சி), (179602ஏ), (179602பி), (179633ஏ), (179633பி), (179635ஏ), (179635பி), (173113ஏ), (179120ஏ), (179120பி), (179120சி).

**பருத்தித்துறை**

(156890ஏ), (156891ஏ), (151529ஏ), (151529பி), (167221ஏ), (169937ஏ), (176464ஏ), (176464பி), (176490ஏ), (177668ஏ), (177668பி), (177880ஏ), (177904ஏ), (180452ஏ), (180455ஏ), (180455பி), (180512ஏ), (181057ஏ), (181127ஏ), (181127பி), (181230ஏ),

**சண்டிலிப்பாய்**

(175013ஏ), (176694ஏ), (176951ஏ), (176951பி), (179003ஏ), (179003பி), (179349ஏ), (179349பி), (179412ஏ), (179445ஏ), (179501ஏ), (179501பி).

**தெல்லிப்பழை**

(179623ஏ), (173109ஏ),

**உடுவில்**

(179617ஏ), (179634ஏ), (179648ஏ), (179648பி), (179662ஏ), (179663ஏ), (179677ஏ), (181468ஏ), (175811ஏ), (175811பி), (175811சி), (179225ஏ), (179225பி), (179225சி), (179380ஏ), (179460ஏ), (179460பி), (179497ஏ), (181461ஏ), (181461பி), (181461சி). (ம-10)

## ஆரம்பகல்வி ஆசிரியருக்கான கற்பித்தல் உபகரணப் போட்டி

### கண்காட்சி நல்லூரில் நடக்கும்

யாழ்ப்பாணம், பெப். 8 ஆரம்பக் கல்விநெறி ஆசிரியர்களுக்கான வலயமட்ட கற்பித்தல் உபகரணப்போட்டியும் கண்காட்சியும் நாளை வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு நல்லூர் ஸ்தான சி. சி. த. க. பாடசாலையில் இடம்பெறவுள்ளன.

கோட்டமட்டப் போட்டியில் தெரிவு செய்யப்பட்ட ஆசிரியர்கள் அனைவரும் தமது ஆக்கங்களை காலை 7 மணிக்கு முன்னர் காட்சிப்படுத்துவதற்கு ஏற்ற ஒழுங்குகளை மேற்கொள்வதுடன் விளக்கமளிப்பதற்குரிய ஒழுங்குகளையும் மேற்கொள்ளுமாறு உதவிக்கல்விப்பணிப்பாளர் த. இராஜலிங்கம் தெரிவித்துள்ளார்.

ஆரம்பக்கல்விநெறி ஆசிரியர்கள் மற்றும் ஆரம்பப்பிரிவு மாணவர்கள் கண்காட்சியைப் பார்வையிட்டுப் பயன் பெறுமாறும் அவர் மேலும் தெரிவித்தார்.

மேற்படி கண்காட்சியை யாழ். வலயக் கல்விப்பணிப்பாளர் திருமதி செ. பகாலிங்சம் ஆரம்பித்து வைப்பார். (க-10-ரி)


## வாழ்த்துகிறோம்

மணிவிழாக் காணும் யாழ் பல்கலைக்கழக உயர் பட்டப்படிப்புகள் பீடாதிபதி - பேராசிரியர்

**அ. சண்முகதாஸ்** அவர்களை

பல்லாண்டு காலம் வாழ்க என மனதார வாழ்த்துகிறோம்.

மாணவர்கள்,
இராமநாதன் நுண்கலைக் கழகம்,
யாழ். பல்கலைக் கழகம்.

(83868)

## விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள அச்சகம் விற்பனைக்குண்டு

தொடர்பு: விள. இல. 1203.
மே/பா. உதயன்,
யாழ்ப்பாணம்.

(சி/15193)


## கண்ணீர் அஞ்சலி

எமது செயலக அலுவலர்
**திருமதி வி. விநாயகமூர்த்தி**
அவர்களின் அன்பு மாமியார்

**திருமதி செல்லமுத்து தங்கமுத்து**

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரதேச செயலரும்,
அனைத்து அலுவலர்களும்.

நலன்புரிச்சங்கம்.
பிரதேச செயலகம்.
வலிகாமம் தெற்கு.
உடுவில்.

(83886)

## முத்திரையிடல்

நல்லூர் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட சந்தை, ப. நோ. கூ. சங்கங்கள் உட்பட அனைத்துவர்த்தக நிலையங்களின் நிறுவைகள் அளவைகள், நிறுக்கும் கருவிகளுக்கும் முத்திரையிடல்.—

இம்மாதம் 12 ஆம் திகதிக்கும் 27 ஆம் திகதிக்கும் இடைப்பட்ட காலத்தில் காலை 9 மணிமுதல் பிற்பகல் 1.30 மணிவரை நல்லூர் பிரதேச சபைத் தலைமைக் காரியாலயத்தில் மேற்கொள்ளபடும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (க-72)

## கைகள் முறிந்த நிலையில் இருவர் ஆஸ்பத்திரியில்

யாழ்ப்பாணம், பெப். 8 மரத்தில் இருந்து தவறி விழுந்து கைமுறிந்த நிலையில் இருவர் யாழ். போதனா ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

ஆட்டுக்கு குழை வெட்ட மரத்தில் ஏறிய மா. கிருஷ்ணசாமி [வயது-38, கட்டுடை) என்ற குடும்பஸ்தர் இடது கை முறிந்த நிலையிலும் —

கோப்பாயைச் சேர்ந்த சக்திவேல்- மயூரன் [வயது-12] என்ற சிறுவன் வலது கை முறிந்த நிலையிலும் யாழ். போதனா ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கோப்பாய்ப் பிரதேச செயலர் பிரிவில் தங்கியுள்ள

## இடம்பெயர்ந்த மக்களுக்கு 2 ஆயிரம் ரூபா கொடுப்பனவு

யாழ்ப்பாணம், பெப். 8 தென்மராட்சியிலிருந்தும், கோப்பாய்ப் பிரதேச செயலர் பிரிவில் இருந்தும் இடம்பெயர்ந்து கோப்பாய்ப் பிரதேச செயலர் பிரிவுக்குள் வசிப்பவர்களுக்கான 2 ஆயிரம் ரூபா கொடுப்பனவு எதிர்வரும் 15 ஆம் திகதி பிரதேச செயலகத்தில் வைத்து வழங்கப்படவுள்ளது.

பெயர்கள் அறிவிக்கப்பட்டும் இதுவரை கொடுப்பனவைப் பெற்றுக்கொள்ளாதவர்கள் தமது கிராம அலுவலருடன் தொடர்புகொண்டு பெயர்ப்பட்டியலில் தமது பெயர்கள் இருப்பதை உறுதிப்படுத்திக் கொண்டபின் அடையாள அட்டைகள் மற்றும் உலர் உணவு அட்டையுடன் வரும்படி பிரதேச செயலர் அறிவித்துள்ளார்.

இடம்பெயர் கொடுப்பனவுக்காக பதிவு செய்து இதுவரை பெயர்கள் அறிவிக்கப்படாமல் இருப்பவர்களும் பிரதேச செயலகத்துடன் தொடர்பு கொள்ளுமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (க-6-72)

## வாராந்த விடுமுறை தினங்களில்மாற்றம்

தென்மராட்சி, பெப். 8 கட்டைவேலி — நெல்லியடி ப. நோ. கூ. சங்கத்தின் கிளைக் கடைகள் உட்பட இரும்பு, கால்நடை வளவு விற்பனைப் பிரிவு ஆகியவற்றில் கடமையாற்றும் ஊழியர்களுக்கான வாராந்த விடுமுறைத் தினங்களை கடந்த மாதம் தொடக்கம் மாற்றியுள்ளதாக சங்கப் பொது முகாமையாளர் செ. தெங்காதரன் அறிவித்துள்ளார்.

இதன் பிரகாரம் நெல்லியடி, வதிரி வடக்கு, கொடிக்காடு, நெல்லியடிச் சந்தை ஆகிய கிளைக் கடைகள் மற்றும் புடைவைக்கடை ஆகியவை செவ்வாய்க்கிழமையும்—

யார்க்கரு, துன்னாலை வடக்கு, கரவெட்டி மத்தி, வட்டுவத்தை, நவீன அங்காடி ஆகிய கிளைக் கடைகள் புதன்கிழமையும்—

கல்வத்தை, கனுவில் ஆகிய கிளைக் கடைகள் வியாழக்கிழமையும்—

இரும்பு விற்பனை, கால்நடை உணவு விற்பனை ஆகிய கடைகள் வெள்ளிக்கிழமையும் —

ஏனையவை ஞாயிற்றுக்கிழமையும் வாராந்த விடுமுறையாகக் கொண்டு மூடப்பட்டிருக்கும்.

இந்த வாராந்த விடுமுறை தினத்திற்கு முதல்நாள் அரை நாள் விடுமுறையாகும். (க-117-173)

## ஒன்றுகூடல்

யாழ்ப்பாணம், பெப். 8 யாழ்ப்பாண வலயக் கல்வி அலுவலக ஊழியர் நலன்புரிக் கழக வருடாந்த ஒன்றுகூடலும் பிரிவுபசார விழாவும் எதிர்வரும் 10ஆம்திகதி சனிக்கிழமை முற்பகல் 10 00 மணிக்கு கழகத் தலைவர் இ. நாகராசா தலைமையில் நடைபெறும். (க-173-10)

## பாடசாலைமீண்டும் பழைய இடத்தில்

குருநகர், பெப். 8 பாஷையூர் புனித அந்தோனியார் றோ. க. மகளிர் வித்தியாலயம் மீண்டும் தனது பழைய இடத்தில் கடந்த திங்கட்கிழமை தொடக்கம் இயங்கி வருகிறது. எனினும் மாணவர்கள் வரவு மிகவும் குறைவாகவே உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. [ம-51]

யாழ். மாவட்டத்தில்

## கடலரிப்பைத் தடுக்க இதுவரை நடவடிக்கை ஏதும் இல்லை

யாழ்ப்பாணம், பெப். 8 யாழ். மாவட்டத்தின் கரையோரம் மற்றும் தீவுப் பகுதிகளில் கடலரிப்பு ஏற்பட்டு வருகின்ற போதும் அதனைத் தடுப்பதற்கான நடவடிக்கைகள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை என்று கவலை தெரிவிக்கப்படுகிறது.

அண்மையில் யாழ். செயலகத்தில் நடைபெற்ற கலந்துரையாடல் ஒன்றில் வல்வெட்டித்துறை, பருத்தித்துறை, நெடுந்தீவுப் பகுதிகளில் ஏற்படும் கடலரிப்பு தொடர்பாகச்சுட்டிக்காட்டப்பட்டது.

கடல் அரிப்பு தொடர்பாக நடவடிக்கை எடுக்கக் கோரி யாழ். மாவட்டத்தில் இயங்கும் கடற்றொழில் திணைக்களத்தினால் கொழும்பிலுள்ள தலைமையகத்துக்கு சுட்டிக்காட்டப்பட்டுள்ள போதிலும்—

இதுவரையும் எந்த விதமான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை என்றும் இந்தக் கலந்துரையாடலில் தெரிவிக்கப்பட்டது. (க—5)

## பாதணிக் கொடுப்பனவு

சண்டிலிப்பாய், பெப். 8 சுகாதாரத் திணைக்களத்தில் கடமையாற்றும் மலேரியாத் தடை இயக்க வெளிக்கள உதவியாளர்களுக்குப் பாதணிக் கொடுப்பனவாக வருடாந்தம் 600 ரூபாவையும், சீருடை சலவைகொடுப்பனவாக 520 ரூபாவையும், சீருடை தையல் செலவாக 400 ரூபாவையும் வழங்குவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கொழும்பிலுள்ள சுகாதாரத் திணைக்களப் பணிப்பாளர் நாயகம் இக் கொடுப்பனவு பற்றிய சுற்று நிருபம் ஒன்றை வெளியிட்டுள்ளார். (க-135)


## பாராட்டி வாழ்த்துகிறோம்

♠♠♠♠♠♠♠♠♠♠♠♠♠♠♠♠♠♠

**திரு. ச. சத்தியவரதன்**

அவர்கள் நெடுந்தீவு மேற்கு சைவப்பிரகாசா வித்தியாசாலையின் அதிபராகப் பதவி உயர்வு பெற்றதையிட்டு பெருமகிழ்வுடன் வாழ்த்துகிறோம்.

நிஷானந்தா ஜுவல்லறி
75, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

(83896)

முறைப்பாடுகளால் பயனில்லை; விமோசனம் பெற்றுத்தருக!

# காணாமல் போனோர் பாதுகாவலர் சங்கம் ஐ.நா.மனித உரிமை அலுவலகத்திற்கு கடிதம்

யாழ்ப்பாணம்,பெப்.8

காணாமல் போனவர்கள் தொடர்பாக பல முறைப்பாடுகள் செய்தும் எதுவித பலனும் கிடைக்கவில்லை. எனவே எமக்கு விமோசனம் பெற்றுத் தரும் நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

இவ்வாறு யாழ்மாவட்ட கைதுசெய்யப்பட்டோர் காணாமல்போனோர் பாதுகாவலர் சங்கம், ஐநா.மனித உரிமைகள் அலுவலகத்துக்கு யாழ்நாடாளுமன்ற உறுப்பினர் ரி.மகேஸ்வரன் ஊடாக அனுப்பிவைத்த கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அக்கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

1996 ஆம் ஆண்டு எமது சங்கம் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியினரால் ஆரம்பிக்கப்பட்டது. இக்கட்சியின ஏற்பாட்டில் சங்க உறுப்பினர்கள் ஜனாதிபதியைச் சந்தித்து உரையாடினார்கள்.

இச்சந்திப்பின் போது காணாமல் போனோரை 6 மாத காலத்துள் தேடிக் கண்டுபிடித்துத் தருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

இன்று பல வருடங்கள் கடந்து விட்ட போதும் எதுவிதமான நடவடிக்கைகளும் -எடுக்கப்படவில்லை. கிருசாந்தி கொலை வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட கோப்ரல் ராஜபக்ஷ நீதிமன்றத்தில் 600 தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டு செம்மணியில் புதைக்கப்பட்டுள்ளார்கள் எனக் கூறினார்.

இதனைத் தொடர்ந்து செம்மணியில் புதைகுழிகள் தோண்டப்பட்டு 18 உடல்களுக்குரிய எலும்புகள் மீட்கப்பட்டன.

இச்சம்பவம் தொடர்பாக கைது செய்யப்பட்ட 5 படையினர் கொழும்பு நீதிமன்றத்தினால் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

செம்மணி புதைகுழி வழக்கு கொழும்பு நீதிமன்றத்தில் தற்போதும் நடைபெற்று வருகின்றது. முக்கிய சாட்சிகள் யாழ்ப்பாணத்தில் இருப்பதனால் இவ்வழக்கை யாழ்ப்பாணத்துக்கு மாற்றுமாறு கோருகின்றோம்

இப்படி அந்தக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-5)

# எழுதுவினைஞர் சேவைக்கு மேலும் 1,136 பேர் தெரிவாவர்

அரசாங்க எழுதுவினைஞர் சேவையில் காணப்படும் வெற்றிடங்களை நிரப்புவதற்காக இரண்டாம் கட்டமாக 1136 பேரைத் தெரிவு செய்ய முடிவு எடுக்கப்பட்டது.

1998இல் நடைபெற்ற இதற்கான போட்டிப் பரீட்சைகளில் பெற்ற புள்ளிகளின் அடிப்படையில் இந்த நியமனங்கள் வழங்கப்படவிருப்பதாக பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் நிர்வாக மறுசீரமைப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

இது தொடர்பாக அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

இந்த நியமனங்களில் 28 புத்தக வைப்பாளர் பதவிகளும் அடங்குகின்றன. இதற்கான நேர்முகப்பரீட்சைகள் 2001 பெப்ரவரி 7ஆம், 8ஆம், 10ஆம், 11ஆம் திகதிகளில் அமைச்சின் 6ஆம் மாடியில் நடைபெறுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

அரசாங்கம் எழுதுவினைஞர் சேவை மற்றும் அதனுடன் இணைந்த சேவைகளுக்காக 1998 இல் நடைபெற்ற போட்டிப் பரீட்சையின் அடிப்படையில் இரண்டாம் கட்ட ஆள்சேர்ப்பின் ஆகக் குறைந்த புள்ளி அடிப்படைகள் வருமாறு:-

கொழும்பு - 123, கம்பஹா - 122, மாத்தளை - 117, கண்டி-121, நுவரெலியா - 114, யாழ்ப்பாணம்-135, மன்னார் - 117, முல்லைத்தீவு - 120, வவுனியா - 126, திருகோணமலை - 121, மட்டக்களப்பு - 119, அம்பாறை - 120, புத்தளம் - 119, குருநாகல் - 123, அநுராதபுரம் - 121, பொலன்னறுவை - 118, பதுளை - 117, மொனராகலை - 115, கேகாலை - 120, இரத்தினபுரி - 123, கிளிநொச்சி - 126.

(க)

# யாழ். கல்வியியல் கல்லூரிக்கு அனுமதி பெற்ற மாணவர் விவரம்

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியல் கல்லூரிக்கு 120 மாணவர்கள் அனுமதி பெற்றுள்ளனர்.

அவர்களின ஒரு தொகுதியினரின் பெயர் விவரங்கள் நேற்றைய உதயனில் வெளியாகி இருந்தன

எஞ்சிய மாணவர்களின் விவரம் வருமாறு:-

### கணிதம்

ரி.தயாபரன் (புலோலி மேற்கு), கே.பிரதீபன் (நவாலி தெற்கு), வி.பாலமுரளி (புன்னாலைக்கட்டுவன் வடக்கு), யு.துசிகாந்தன் (மாசார், பளை), வி.செந்தூரன் (குரும்பசிட்டி கிழக்கு), எம்.ராஜசேகர் (பாண்டிருப்பு).

ஆர்.ரஜனி (சுதுமலை தெற்கு), வி.குகநாதன் (மாதகல்),எஸ்.தினேஷ் (பண்டாரக்குளம்), ரி.ரஞ்சன் (திருநெல்வேலி மேற்கு), எஸ்.ரகுராம் (நல்லூர்), கே.பாலகுமார் (ஏழாலை தெற்கு), வி.சுபாஸ்குமரன் (காரைதீவு), ஜி.உசாநந்தன் (மந்துவில் மேற்கு), எஸ்.ஜெயானந்தன் (சங்கானை).

பி.சுபாமா (சுதுமலை வடக்கு), எம்.சுதாஜினி (ஆரையம்பதி), ஏ.அகிலினி (உரும்பிராய் கிழக்கு), ஜி.பிரியதர்சினி (சண்டிலிப்பாய்), எஸ்.நிருவிகா (கொக்குவில் மேற்கு), ஆர்.சிவகௌரி (புலோலி தெற்கு), எஸ்.மேகலா (கோப்பாய் மத்தி), கே.சோபனா (உரும்பிராய் தெற்கு), ரி.கவிதா (திருநெல்வேலி மேற்கு).

வி.துஷானந்தி (கல்முனை),எஸ் ஸ்ரீபிரியா (நல்லூர்), கே.அபிராமி (பணணாகம் தெற்கு), எஸ்.திரிவேணி என்.சந்திரன் (சுழிபுரம்), வி.சந்திரலதா (கொக்குவில்)

### நடனம்

ரி.தயாபரன் (பாரதி கிராமம்), ரி.சசிரேகா (குருமண்காடு), ரி.தர்சன்னா (மட்டக்களப்பு), எம்.பிறேமலதா (மட்டக்களப்பு) கே.சரோஜினி, மட்டக்களப்பு), ரி.கமலேஸ் (மட்டக்களப்பு), டீ.கீதாஞ்சலி (மட்டக்களப்பு), பி.கஸ்தூரி (வவுனியா), ரி.ஜெயசிறி (சங்கத்தானை).

### சித்திரம்

ஆர்.ஜீவராஜ் (முல்லைத்தீவு), ஏ.லோகநாதன் (மட்டக்களப்பு), எஸ்.கருணாகரன் (வவுனியா), ஜி.ஏ.ஜனகராஜ் (வவுனியா), எஸ்.மகேசன் (அக்கரைப்பற்று), வி.சுஜீவ் (கல்பிட்டிய), எம்.எம்.ஹமீடா (புத்தளம்), எம்.எஸ்.ஜே.முருசிபா (புத்தளம்), எம்.எம்.ஹலீமா (புத்தளம்).

### விஞ்ஞானம்

எஸ்.கஜேந்திரன் (கோப்பாய் தெற்கு), ரி.செந்தில்குமரன் (மாதகல்), பி.உமாகரன் (மானிப்பாய்), ஏ.கஜதீபன் (கொக்குவில் கிழக்கு), எஸ்.கார்மேகவண்ணன் (புலோலி தெற்கு), கே.சந்திரகுமார் (சுன்னாகம்).

ரி.பரமசோதி (காரைநகர்), ஏ.முகுந்தன் (திருகோணமலை), வை.யசந்தன் (அரியாலை), ஏ.ஜீவசுரேஷ் (மட்டக்களப்பு), டிநக்கீரன் (கரவெட்டி), என்.வேணுகோபன் (மட்டக்களப்பு).

எஸ்சிவரங்கன் (அக்கரைப்பற்று), சியாமளரூபன் (தாவடி வடக்கு), என்.முருகவேல் (நயினாதீவு), எஸ்.சுபாசினி (நவாலி வடக்கு), கே.திருச்செல்வி (திருநெல்வேலி தெற்கு) எஸ்.என்.சர்மிளா (உரும்பிராய்).

ஜே.தாரணி (யாழ்ப்பாணம்), எஸ்.சிவரூபி (கொக்குவில்), எம்.ஜசிந்தா (யாழ்ப்பாணம்), வி.விஜிதா (நீர்வேலி மத்தி) கே.பாமினி (நல்லூர்), எஸ்.நளாயினி (சித்தங்கேணி), வி.விஜிதா (புலோலி மேற்கு), கே.செல்வி (யாழ்ப்பாணம்), டீ.வளர்மதி (கொக்குவில்), எஸ்.சுபாஜினி (காரைதீவு), எம்.தேகினி (வட்டு.மேற்கு), ஜி.லதா (யாழ்ப்பாணம்). (க-7-73)

## பாம்பு தீண்டிய பெண் ஆஸ்பத்திரியில்

யாழ்ப்பாணம்,பெப்.8

சுன்னாகத்தில் வீட்டுகுள்ளிருந்த பாம்பு கடித்து ஆபத்தான நிலையில் குடும்பப்பெண் ஒருவர் யாழ். போதனா ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சுன்னாகம் தெற்கைச் சேர்ந்த விக்கிரராஜா, வள்ளிப்பிள்ளை (வயது - 56) என்ற பெண்ணுக்கே கையில் பாம்பு கடித்தது. (க-6)

# விபத்துக்களில் காயமடைந்த 4 பேர் யாழ். ஆஸ்பத்திரியில்

யாழ்ப்பாணம்,பெப்.8

குடாநாட்டில் பல்வேறு இடங்களிலும் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற வீதி விபத்துக்களின் போது காயமடைந்த 4 பேர் யாழ்.போதனா ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சண்டிலிப்பாயில் நிகழ்ந்த சைக்கிள் விபத்தில் சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரி உயர்தர வகுப்பு மாணவியான பாலசிங்கம் தர்சினி (வயது-17) என்பவர் காயமடைந்தார்.

யாழ்.பற்றிக்ஸ் கல்லூரிக்கு அருகில் மோட்டார் சைக்கிள் விபத்தில் புது வீதி கொய்யாத் தோட்டத்தைச் சேர்ந்த பயஸ் வின்சன யோசப் (வயது - 43) என்ற குடும்பஸ்தர் காயமடைந்தார்.

கந்தரோடை வீதியில் மோட்டார் சைக்கிள்-சைக்கிள் விபத்தில் அளவெட்டி தெற்கைச் சேர்ந்த குமார் ஜெயந்தன் (வயது-30) என்ற இளைஞருக்கு வலது கால் முறிந்துள்ளது.

முத்திரைச் சந்தியில் நடைபெற்ற ஆட்டோ-சைக்கிள் விபத்தில் பருத்தித்துறை வீதி நல்லூரைச் சேர்ந்த மகாலிங்கம் அருள்ராஜ் (வயது-27) என்ற குடும்பஸ்தர் காயமடைந்தார். (க-6)

# சாயி சிந்தனை



தர்மம் செய்யப் பழகிக்கொள். நீ எப்போதும் நல்ல சிந்தனையோடு நல்லதைச் செய்வதற்கு முயற்சிசெய். வாழ்வில் உனக்கு வெற்றி நிச்சயம். அதை விடுத்து அதர்ம வழியில் செல்ல முற்பட்டாயேயானால் உன்னை நீயே ஏமாற்றியவனாவாய்.

'முற்பகல் செய்யப் பிற்பகல் விளையும்' என்பார்கள். ஆகவே தாம் தாம் செய்த வினைப்பயனைத் தாமே அனுபவிப்பர். ஆதலால் மானிடப் பிறவி எடுத்த நாம் ஆன்ம ஈடேற்றத்துக்கான வழி வகைகளைத் தேடிக்கொள்ள வேண்டும். அதையும் நாளை என்று தள்ளிவைக்காமல் இன்றே செய்வதற்கு ஆரம்பிக்க வேண்டும். அதுவும் நன்றே செய்ய வேண்டும்; நன்மை பயப்பதாய் இருக்க வேண்டும்.

ஆகவே, இன்றுமுதல் நல்லதை எண்ணி, நல்லதைச் செய்து, நல்லதையே நாடி நமக்கும் மற்றவர்களுக்கும் பயனுள்ளவர்களாக வாழப் பழகிக் கொள்வோம்.

ஆதாரம் - **சனாதனதர்மம்**


## முறைசாராக் கல்விப் பிரிவு யா/தேவரையாளி இந்துக்கல்லூரி கரவெட்டி

கீழ்வரும் பயிற்சிநெறிகள் மிக விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன.

1) வானொலி, தொலைக்காட்சி
2) உடையமைத்தல்
3) ஆங்கில சுருக்கெழுத்தும் தட்டெழுத்தும்
4) மின்சார இலத்திரனியல்
5) துணி அச்சிடல்

மாணவர்கள், போதனாசிரியர்கள் விண்ணப்பப்படிவங்களை காரியாலயத்தில் பெற்று 23-02-2001 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

- அதிபர்.

(C/15203)


## கண்ணீர் அஞ்சலி

திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும் கல்வியங்காட்டை வசிப்பிடமாகவும் கொண்ட முன்னாள் பொலீஸ் அத்தியட்சகரும் ஆகிய

**தாமோதரம்பிள்ளை ஜெகந்நாதன்**

06. 02. 2001 (செவ்வாய்க்கிழமை) காலமானார். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தாருக்கு ஆழ்ந்த அனுதாபத்தைத்தெரிவித்துக் கொள்கின்றோம்.

(C/15195) — *சானுகா நகைமாடம்.*

## கண்ணீர் அஞ்சலி

திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும் கல்வியங்காட்டை வசிப்பிடமாகவும் கொண்ட முன்னாள் பொலீஸ் அத்தியட்சகரும் தற்போதைய நந்தினி நகைமாடக் கணக்காளரும் ஆகிய

**தாமோதரம்பிள்ளை ஜெகந்நாதன்**

06. 02. 2001 (செவ்வாய்க்கிழமை) காலமானார். அன்னாரின் மறைவால் துயருறும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தினைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

*218G,கஸ்தூரியார் வீதி,*
*யாழ்ப்பாணம்.*
*T.P.: 3121*

(C/15198)

**நந்தினி நகைமாடம்**
உரிமையாளரும்
ஊழியர்களும்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 24 - 06 - 1968



மறைவு 21 - 01 - 2000

**திருமதி தம்பித்துரை கிருதாகினி**
**(அனுரா)**
திதி: 08-02-2001

சகோதரியே! நீ மறைந்து
ஆண்டு ஒன்று சென்றாலும்,
எம் விழிகளின் ஓரங்களில்
இன்னும் கண்ணீர் காயவில்லை.

*புதுறோட்,*
*ஆறுகால்மடம்,*
*ஆனைக்கோட்டை.*

(83893)

சகோதரன்
**சிவம் குடும்பத்தார்.**

விற்பனைக்கு
அதிநவீன கணனிகள்
Pentium III 800 MHz ( Multimedia)
கையடக்கமான LAPTOP ( TOSHIBA ) கணனிகள், PRINTERS, UPS etc.

- நவீன தொழில்நுட்பத்துடன் கூடிய அதிநவீன கணனிகள் நியாயமான விலைக்கு பெற்றுக்கொள்ளலாம்.
- கணனிப்பாவனைக்கான ஆலோசனையும் அடிப்படைப் பயிற்சியும் இலவசம்.
- கணனிகளின் சீரான பராமரிப்புக்கான, விற்பனைக்கு பிந்திய சேவையுடன் கணனிகள், கணனிக்கான உதிரிப்பாகங்களை பெற்றுக் கொள்ள!

IIS SALES UNIT,
100, Clock Tower Road, Jaffna.
☎ 2831 E-mail - iis@sltnet.lk

## இரு புலிகள் உயிரிழப்பு

வவுனியா,பெப்.8
கடந்த 16ஆம் திகதி எழுது மட்டுவாழ் பகுதியில் இடம்பெற்ற மோதல் சம்பவம் ஒன்றில் சங்கீதா (கந்தையா கவிதா-யாழ்ப்பாணம்), கர்சினி (தனபாலசிங்கம் விஜிதா-யாழ்ப்பாணம்) ஆகியோர் தமது தரப்பில் உயிரிழந்தனர் என விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.(ஜ-7-164)

## சிவப்பு அரிசி டுபாய்க்கு ஏற்றுமதி

கொழும்பு,பெப்.8
இலங்கையில் இருந்து முதல் தடவையாக 20 ஆயிரம் கிலோ சிவப்பு அரிசி டுபாய்க்கு ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளதாக அமைச்சர் றெஜி ரணதுங்கா தெரிவித்தார்.
(க-6)

## முதலாவது பிறந்த நாள் வாழ்த்து

HAPPY BIRTHDAY



### செல்வன் யோகராஜா செந்தூரா
08-02-2001

மெலிஞ்சோடை, காரைநகரைச் சேர்ந்த **யோகராஜா ~ தில்லைராணி** தம்பதிகளின் செல்வப் புதல்வன் **செந்தூரா** தனது முதலாவது பிறந்தநாளை இன்று(08-02-2001) வியாழக்கிழமை ரொறன்ரோ, கனடாவில் உள்ள தனது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகின்றார்.
இவரை அப்பப்பா, அப்பம்மா, பெரியப்பா, பெரியம்மா(கனடா), பெரியமாமி, பெரியமாமா, கோகுல் மச்சான் (அஸ்திரேலியா), சின்ன அப்பம்மா(சுதுமலை), சின்னமாமி, அம்மப்பா, அம்மம்மா, சின்னமாமா, சித்திமார் (கொழும்பு), பெரியமாமா (நோர்வே) மற்றும் உற்றார், உறவினர், இவரை இறைவன் அருளால் எல்லா நலமும் பெற்று சிறப்புடன் வாழ வாழ்த்துகிறார்கள்.

சுதுமலை மேற்கு,
மானிப்பாய்.
(83707)

தகவல்:
செல்வி க.நவமலர்

## நீங்காத நினைவலைகள்

ஓராண்டு 18மாதங்கள்





அமரர் பொன்னையா நடராசா திருமதி சோதிமுத்து நடராசா
23-06-1911 <= தோற்றம் => 29-08-1914
20-01-2000 <= மறைவு => 29-06-1999
திதி: 08-02-2001

ஆண்டு ஒன்று ஓடி மறைந்தாலும்
மாண்டிடுமா உங்கள் நினைவுகள்.....
உங்கள் இருவரின் ஆத்மா சாந்தியடைய
இறைவனை வேண்டுகின்றோம்.

கெருடாவில் தெற்கு,
தொண்டமனாறு.
(83776)

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

## அகமகிழ்கின்றோம்



(ஆசிரியருடன் மாணவன்)

**'SHOTOKAN KARATE - DO INTERNATIONAL FEDERATION'**
இனது யாழ். மாவட்ட அமைப்பாளரும் எமது பயிற்றுநருமாகிய
**(SENSEI)**
**SENSEI A.RANJITH SHAELINDRAKUMAR**
அவர்கள்
அண்மையில் மேற்படி நிறுவன தலைமையகத்தில் (கொழும்பு)
நடைபெற்ற தரமுயர்த்துதல் நிகழ்வில்
நிறுவனத் தலைவரும், இலங்கைப் பிரதிநிதியுமான
**SHIHAN. BONNIE ROBERTS (8th DAN)**
அவர்களினால்
'4 ஆவது கறுப்புப் பட்டிக்கான டிப்ளோமா சான்றிதழ்'
பெற்றுக் கொண்டமையினையிட்டு நாம் அகமகிழ்வதுடன் இவர்களது பணி மென்மேலும் சிறப்புற அமைய வாழ்த்துகின்றோம்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
கராத்தே மாணவர்கள்
(83833)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



எமது அதிபர்
**திரு.க.சந்திரசேகரன்** அவர்கள்
இலங்கை அதிபர் தரம் 2.IIக்கு பதவி உயர்வு பெற்றதையிட்டு எமது ஆசிரியர்களும் மாணவர்களும் பாராட்டி வாழ்த்துகின்றோம்

ஆசிரியர் கழகம்,
மாணவர்கள்
(யாழ். சித்தன்கேணி
ஸ்ரீ கணேச வித்தியாலயம்)
(83869)

## 2ஆம் ஆண்டில் நீங்காத நினைவலைகள்

மண்ணில் 18 - 03 - 1944



விண்ணில் 08 - 02 - 1999

### அமரர் தாவீதுராஜா ஞானவெளிச்சம்

தந்தையை மதிப்பவன் செல்வங்களின் அதிபதியாவான்!
தந்தையைப் பூஜை செய்பவன் நீண்ட ஆயுளுடையவனாவான்
எம்மைப் படைத்தவரும் அவரே!
எம்மைக் காப்பவரும் அவரே!

அன்னாரின் ஆத்மா நித்திய ஒளியில்
வீற்றிருக்க மன்றாடுகின்றோம்.

உரும்பிராய் கிழக்கு,
உரும்பிராய்.

மனைவி, பிள்ளைகள்,
பெற்றோர், உறவினர்கள்.
(83851)

# குடாநாட்டு விவசாயிகளின் பிரச்சினைகள் மாதம் ஒரு தடவை சந்தித்து ஆராயப்படும்

## விவசாய பீடாதிபதி தகவல்

யாழ்ப்பாணம்,பெப்.8

குடாநாட்டு விவசாயிகளைக் கௌரவப்படுத்தும் நோக்குடன் யாழ்.பல்கலைக்கழக விவசாய பீடத்தினால் விவசாயிகள் தினம் பிரதி மாதமும் கொண்டாடப்படவுள்ளது. இத்தினத்தில் விவசாயிகளை நேடியாகச் சந்தித்து அவர்களது பிரச்சினைகள் குறித்து ஆராயப்படும்.

இவ்வாறு யாழ்.பல்கலைக்கழக விவசாயபீட பீடாதிபதி சு.இராஜதுரை உதயனுக்குத் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறியதாவது:-

விவசாயிகளின் அடிப்படைப் பிரச்சினைகள் தொடர்பாக அவர்களுடன் ஆராய்ந்து அவற்றுக்கான தீர்வுகளைக் காண்பதன் மூலம் விவசாயிகளை ஊக்கப்படுத்துவதும் இந்தத் தினததின் முக்கிய நோக்கங்களில் ஒன்றாகும்.

ஒவ்வொரு மாதமும் இந்த விவசாயிகள் தினத்தைக் கொண்டாடுவதன் மூலம் வருடத்தில் 10 அல்லது 12 தடவைகள் விவசாயிகளைச சந்திக்க முடியும்.

இன்று குடாநாட்டு விவசாயிகளுக்கு பல்வேறு அடிப்படைப் பிரச்சினைகள் உள்ளன. அவற்றில் மிக முக்கியமானதாக விவசாயம் தொடர்பான தொழில்நுட்ப பிரச்சினைகள், விவசாய உள்ளீடுகளைப் பெற்றுக் கொள்வதில் ஏற்படும் சிக்கல்க்ள் மற்றும் உற்பத்தி செய்தவற்றை சந்தைப்படுத்தும் போது விவசாயிகளுக்கு ஏற்படும் கஷ்டங்கள் என்பவற்றைக் குறிப்பிட முடியும்.

இந்தப் பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதற்கோ அல்லது விவசாயிகளுக்கு உதவுவதற்கோ குடாநாட்டில் எவருமே முன்வரவில்லை. இவற்றைக் கவனத்தில் எடுத்து எமது விவசாயபீடம் விவசாயிகளுக்கு உதவத் திட்டமிட்டுள்ளது.

இதன் முதற் கட்டமாக கடந்த தைமாதம் 9ஆம் திகதி குடாநாட்டு விவசாயிகளையும், விவசாயத்துடன் தொடர்புடைய நிறுவனங்களையும் ஒன்று திரட்டி கூட்டம் ஒன்றை நடத்தினோம்.

விவசாயிகள் தமது பிரச்சினைகளை வெளிப்படையாகப் பேசி உரிய தீர்வைக் காண்பதற்கு மேற்படி நிகழ்வு தமக்கு ஆதரவாக இருப்பதாகத் தெரிவித்தார்கள். இவற்றைக் கருத்தில் எடுத்து அடுத்துவரும் கூட்டங்களை நாம் மூன்று பிரிவாக நடத்தவுள்ளோம். முதலில் விவசாயிகளின் உற்பத்தி தொடர்பான பிரச்சினை; இதில் விவசாய உற்பத்தி யில் ஏற்படும் நோய்த்தாக்கங்கள், மற்றும் புதிய வகை பயிரினங்கள் உற்பத்தி தொடர்பான பிரச்சினைகள் குறித்து ஆராயப்படும்.

அடுத்து விவசாயிகளுக்கு ஏற்படும் ஏனைய பிரச்சினைகள் தொடர்பாக ஆராயப்படுவதுடன் பிரச்சினைகளுக்குரிய தீர்வுகளை ஆலோசித்து அவற்றுடன் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு தெரியப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

மேலும் எமது ஆராய்ச்சியின் போது எமக்கு ஏற்பட்ட அனுபவங்களை விவசாயிகளுடன் பகிர்ந்து கொள்ளத் திட்டமிட்டுள்ளோம்.

இந்த விவசாயிகள் தினததை அடுத்த மாத இறுதிப் பகுதியில் இரண்டாவது தடவையாக நடத்தத் திட்டமிட்டிருக்கிறோம். மேற்படி கூட்டத்தில் குடாநாட்டு விவசாயிகள் பங்குபற்றுவதன் மூலம் தமது பிரச்சினைகளை உரிய மட்டங்களுக்குத் தெரியப்படுத்த முடியும் எனவும் தெரிவித்தார். (க-6-5-ரி)

## சனசமூக நிலையங்களுக்குத் தளபாடங்கள்

காரைநகர்,பெப்.8

வடபகுதி புனர்வாழ்வு புனரமைப்பு அதிகாரசபையின் உதவியுடன் வேலணைப் பிரதேசசபையினால் அதன் எல்லைக்குட்பட்ட சனசமூகநிலையங்களுக்கு தளபாடங்கள் வழங்கப்படவுள்ளன.

வேலணை கிழக்கு கலைமகள் சனசமூகநிலையம், வேலணை மேற்கு திருவள்ளுவர் சனசமூக நிலையம், வேலணை மேற்கு காந்திஜி சனசமூகநிலையம், வேலணை கிழக்கு தேவி கோட்டம் சனசமூகநிலையம் ஆகியவற்றிற்கே 30 ஆயிரம் ரூபா பெறுமதியான தளபாடங்கள் வழங்கப்படவுள்ளன.

நயினாதீவு ஸ்ரீ ஞானவைரவர் சனசமூகநிலையப் புனரமைப்புக்கு 70 ஆயிரம் ரூபா நிதியும் வழங்கப்பட உள்ளதாக வேலணைப் பிரதேச சபைத் தலைவர் என்.கருணாகரகுருமூர்த்தி தெரிவித்தார். (ஐ-73)

# கசிப்பு உற்பத்தி செய்வோர் தங்களது சமூகத்தையே அழிக்க வழி கோலுகின்றனர்

## விவேகானந்தர் ஜெயந்திதின விழாவில் உரை

யாழ்ப்பாணம்,பெப்.8

எல்லா மனிதர்களுக்கும் ஏதோ ஒரு விதத்தில் மனக்கவலைகள், கஷ்டங்கள் உள்ளன. அவற்றுக்கு நிவாரணி கசிப்பு அல்ல. தனது இஷ்ட தெய்வத்திடம் குறைகளைக் கூறிப் பிரார்த்திப்பதே மனக்கஷ்டங்களை நீக்கும் வழியாகும். கசிப்பு உற்பத்தி செய்பவர்கள் தமது சமூகத்தின் அழிவுக்கு வழி செய்பவர்கள். அவர்கள் சமூகத்தை அழிக்கும் கோடரிக்காம்புகளும் ஆவர்.

இவ்வாறு யாழ்.பல்கலைக்கழக விஞ்ஞானபீட மாணவன் தி.சத்தியேந்திரா யாழ்.இந்துக் கல்லூரி பிரார்த்தனை மண்டபத்தில் சுவாமி விவேகானந்தரின் ஜெயந்தி தின விழாவில் உரையாற்றும்போது கூறினார்.

அவர் அங்கு உரையாற்றும் போது மேலும் கூறியதாவது:-

மிருகங்களை வேள்வி என்று வெட்டுவது நிறுத்தப்பட வேண்டும். இது ஒரு மூட நம்பிக்கையாகும். பசுவில் பிரம்மா, விஷ்ணு, உருத்திரன் உட்பட முப்பத்து முக்கோடி தேவர்களும் வீற்றிருப்பதாக சைவ சித்தாந்தம் கூறுகின்றது. பசுவதையை முற்றாக நிறுத்த வேண்டும்.

யாழ்ப்பாணத்தில் உள்ள மினி சினிமாக்கள் தரக்குறைவான படங்களை காண்பித்து குறிப்பாக பாடசாலை மாணவர்களைத் தவறான பாதைக்கு இட்டுச் செல்கின்றன. இதனை மினிசினிமா உரிமையாளர்கள் உணர்ந்து சமூகத்தில் விழிப புணர்வை ஏற்படுத்தும் நல்ல படங்களைக் காண்பித்து தமது வருமானத்தை அதிகரித்துக் கொள்ள வேண்டும்.

இந்துக்களின் மங்கள விழாக்களில் வீடியோப் படப்பிடிப்புக்கே முன்னுரிமை வழங்கப்படுகின்றது. இதனால் பாரம்பரிய மரபுகளே பெருமளவில் மாறி வருகின்றன. யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் ஒட்டுமொத்த தமிழ்மக்களின் சுயநிர்ணய உரிமைக்காகக் குரல் கொடுக்கின்றார்கள். இதனை அனைத்துலக தமிழ் சமூகமும் வரவேற்கும் அதே வேளை புகுமுக மாணவர்களின் அடிப்படை உரிமை களையும் மீற மாட்டோம் என பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் வெளிப்படுத்த வேண்டும்.

பகிடி வதைக்கு ஆதரவாக ஒரு சில விரிவுரையாளர்களும் இருக்கின்றனர். இவர்களது இத் தவறுகளைச் சுட்டிக் க்காட்டும் மாணவர்களின் பெறுபேறுகளில் தமது கைவரிசையைக் காட்டுவது வேதனைக்குரியது - என்றார்.

கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை மாணவன், ம.சத்தியகுமார் யாழ்.இந்துக்கல்லூரி இந்து இளைஞர் மாமன்றத் தலைவர் நி.சர்வேஸ்வரா, கு.நக்கீரன் ஆகியோரும் அங்கு உரையாற்றினர். (க-72)

## பிரதேச செயலகங்கள் நேரடியாகவே கொழும்புக்கு விண்ணப்பங்களை அனுப்பினால் விரைவில் அ.அட்டைகள்

வலி.மேற்கு.பெப்.8

கொழும்பிலுள்ள ஆள்பதிவுத் திணைக்களத்துக்கு பிரதேச செயலகங்களில் இருந்து நேரடியாக அனுப்பி வைக்கப்படும் விண்ணப்பங்களுக்கு துரிதகதியில் அடையாள அட்டைகள் விநியோகிக்கப்படுகின்றன.

யாழ்.மாவட்டத்திலுள்ள சில பிரதேச செயலகங்கள் தேசிய அடையாள அட்டை விண்ணப்பங்களை நேரடியாக ஆள்பதிவுத் திணைக்களத்துக்கே அனுப்பி வருகின்றன. வேறு சில பிரதேச செயலகங்கள் யாழ். செயலக திணக்களத்திலுள்ள ஆள்பதிவுத்திணைக்களப் பிரிவு ஊடாக அனுப்பி வருகின்றன.

கொழும்பிலுள்ள ஆள்பதிவுத் திணைக்களத்துக்கு நேரடியாக அனுப்பப்படும் விண்ணப்பங்களுக்கு துரித கதியில் அடையாள அட்டைகள் வந்து சேர்ந்து விடுகின்றன. சகல பிரதேச செயலகங்களும் நேடியாக விண்ணப்பங்களை ஆள்பதிவுத் திணைக்களத்துக்கே அனுப்பி வைததால் காலதாமதமன்றி அடையாள அட்டைகள் கிடைத்துவிடும் என்று பொதுமக்கள் கருத்துத் தெரிவிக்கின்றனர். (க-175)

# குடாநாட்டுக்கு கப்பலில் மரத் தீராந்திகள் வரும்

யாழ்ப்பாணம்,பெப்.8

யாழ்மாவட்டத்தில் மரங்கள் தறிப்பதைத் தவிர்க்கும் நோக்குடனும் மரத்தேவையைப் பூர்த்திசெய்யும் வகையிலும் தென்பகுதியில் இருந்து மரத் தீராந்திகள் எடுத்துவரப்படவுள்ளன.

இதற்கான ஏற்பாடுகளை வட மாகாண அரச மரக்கூட்டுத்தாபனம் மேற்கொண்டுள்ளதாக அதன் முகாமையாளர் க.விஜயரட்ணம் தெரிவித்தார்.

10 லொறி மரத்தீராந்திகள் கப்பலில் எடுத்துவரப்பட்டு விநியோகம் செய்யப்படவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

அத்துடன் 100 கிலோ தேக்கு விதைகளும் தென்பகுதியிலிருந்து எடுத்துவரப்படவுள்ளன. அந்த விதைகள் மரக்கூட்டுத்தாபனத்தின் கன்றுகள் உற்பத்தி மையத்தில் நடப்பட்டு 3 மாத காலத்தின் பின்னர் விற்பனை செய்யப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

## குப்பிவிளக்கு பாவிப்பதால் ஏற்படும் விபரீதம்

யாழ்.குடாநாட்டில் அனேகமாக எல்லோரும் குப்பிவிளக்கினால் ஏற்படும் அபாயத்தினை அறியாமல் அதனைப் பாவிக்கின்றனர். பாதுகாப்புக்கான விளக்கு (**Hurricane Lantern**) ஒன்றை 300 ரூபா அளவில் கொடுத்து வாங்குவதால் பின்வரும் அபாயங்களைத் தவிர்க்கலாம்.

குப்பிவிளக்கில் கண்ணாடிப் போத்தலில் மண்எண்ணையினால் நிரப்பி அதன் உலோக மூடியில விளக்குத் திரியினைச் செருகிப் பாவிக்கின்றனர். அல்லது தகரத்தால் செய்யப்பட்ட விளக்கினைப் பாவிக்கின்றனர்.

இவ்விரு விளக்குகளும் எண்ணெய்க் கசிவு தடுக்கப்பட்டது (**Oil Proof**) அல்ல. விளக்குகள் எரியும் பொழுது வெப்பமேற முடியும்; போத்தலும் ஒரே பொருளில் அமையாதவிடத்து விரிவடைவதில் ஏற்படும் வித்தியாசத்தினால் விளக்குச் சரியும் வேளையில் வெப்பம் ஏறிய மண் எண்ணெய் விளக்கிற்கு வெளியே வந்து பாதுகாப்பற்ற சுவாலையுடன் நேரடித் தொடர்பு உண்டாவதால் தீப்பற்றி எல்லா இடமும் பரவுகின்றது. இதனால் பாரதூரமான விளைவுகள் ஏற்படுகின்றன.

### வீட்டில் பாதுகாப்பு

எம்மவர்களில் சிலர் படுத்திருந்து படிக்கும் பழக்கம் உடையவர்கள். அது நல்ல பழக்கவழக்கம் அல்ல. அதிலும் குப்பி விளக்கில் படுத்திருந்து படித்தால் விளக்கின் மங்கிய ஒளியினால் முதலில் அசௌகரியமும் ஏற்படுகின்றது. இதனால் மூளை சலிப்படைவதால் எம்மை அறியாமல் நித்திரை வருகின்றது. இதனால் விளக்குச் சரிந்து ஏற்படும் விபத்தினால் படிப்பறிவுடையவர்கள், பாமரமக்கள் என்ற பேதமின்றி சிலருக்கு மரண விபத்தும் சம்பவித்துள்ளது. இதனால் முழுக்குடும்பமுமே பாதிப்படைகின்றது.

தகவல்:சி.மகேந்திரராஜன்.
மாவட்ட தொழிற்சாலை பாதுகாப்பு பொறியியலாளர்.

# தீவுப் பகுதிக்குச் சென்று வரும் அரச ஊழியர்கள் மீது கெடுபிடி

யாழ்ப்பாணம்,பெப்.8

யாழ்ப்பாணத்திலிருந்து தீவுப் பகுதிக்குச் சென்று வரும் அரச ஊழியர்கள் மீது கடந்த சில நாள்களாகப் படையினரின் கெடுபிடிகள் அதிகரித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த திங்கள் மாலை 3.30 மணிக்கு புங்குடுதீவில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்த வடபிராந்திய போக்குவரத்துச் சபை பஸ்ஸில் இரு தேங்காய்களை எடுத்து வந்த ஒருவர் படையினரால் இம்சைப் படுத்தப்பட்டார் என்று தெரிவிக்கப்பட்டது.


'சொப்பிங் பாக்' ஒன்றில் தேங்காய்களைப் போட்டு வாயினால் கௌவ்வியவாறு சில யார் தூரம் இவர் பயணிகள் முன்னிலையில் நடக்க வைக்கப்பட்டார். (க-5)

## அபிவிருத்திச் சங்க கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், பெப்.8

பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் பிரிவில் இயங்கிய கிராம அபிவிருத்திச் சங்கங்கள், மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்கள் ஆகியவற்றின் தலைவர்கள், செயலாளர்களுக்கான கலந்துரையாடல் இன்று வியாழக்கிழமை காலை 10.00 மணிக்கு புலோலியில் அமைந்துள்ள பச்சிலைப்பள்ளி பிரதேச செயலக அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

தலைவர், செயலாளர், பொருளாளர் ஆகியோர் தமது கணக்கு அறிக்கைகளுடன் சமுகமளிக்குமாறு பிரதேச செயலர் கேட்டுள்ளார். (ம)



நெடுந்தீவு கலாசார சபையின் ஏற்பாட்டில் தமிழாராய்ச்சி மாநாட்டின் தந்தை "தமிழ்த்தூது" தவத்திரு தனிநாயகம் அடிகளுக்கு ரூபாய் 35 ஆயிரம் செலவில் உருவச்சிலை ஒன்று அமைக்கப்பட்டு வருகிறது.

யாழ்ப்பாணக் கல்லூரியில் மேற்கொள்ளப்பட்டுவரும் இந்தச் சிலை அமைப்புப் பணிகளை கல்லூரி முதல்வர் வண.பிதா ஏ.ஏ.போல் பார்வையிடுவதையும், அருகில் கல்லூரியின் ஆசிரியரும், சிலையை உருவாக்கி வருபவருமான பீ.ஏ.அமிர்தநாதன் சிலை உருவாக்கத்தில் ஈடுபட்டுள்ளதையும் படத்தில் காணலாம். சிலைத் திறப்புவிழா அடுத்த மாத முற்பகுதியில் நடைபெறவுள்ளது. (ம-7)

## சின்னஞ்சிறு விளம்பரம்

### யாழ்ப்பாணம்

இலக்கியக் கட்டுரைகள் விமர்சன நூலை எழுதிய அராலியூர் ந.சுந்தரம் பிள்ளையின் ஏனைய நூல்கள்:- 1. யாழ்ப்பாணம்-சிறுகதைத் தொகுப்பு, 2.யாழ்ப்பாணமா? கொழும்பா? நாடக நூல், 3.நாடகம் எழுதுவது எப்படி? 4.யாழ்ப்பாணத்தில் அந்த ஆறு மாதங்கள். (83012)

### தவறிவிட்டது

'தேவி வாசா', தியேட்டர் லேன், இணுவில் கிழக்கில் வசிக்கும் முருகையா பிரபாகரன் என்பவருடைய தே.அ.அ.(இல.561631727V), விசேட அ.அ. (இல.0901015519), பிரபாகரன் செல்வேந்திரா என்பவருடைய விசேட அ.அ. (இல.0901015518), தே.அ.அ. (இல.585751928V), தேசிய சேமிப்பு வங்கி கணக்குப் புத்தகம் என்பன இணுவிலுக்கும் சுன்னாகத் திற்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் மேற்படி விலாசத்தில் அல்லது தேசிய சேமிப்பு வங்கி, சுன்னாகம் என்ற விலாசத்தில் ஒப்படைத்து உதவவும். சன்மானம் வழங்கப்படும். (83855)

ஆஸ்பத்திரி வீதி, கோண்டாவில் கிழக்கைச் சேர்ந்த செல்வநாயகம் கலா என்பவருடைய தே.அ.அட்டையும் (இல.716743535V) விசேட அ.அட்டையும் (இல.0902016694), சுன்னாகம் மக்கள் வங்கி கணக்குப் புத்தகமும் (இல 21635) 6-2-2001 அன்று சுன்னாகத்திற்கும் மேற்கு கோண்டாவில் சந்திக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் சுன்னாகம் மக்கள் வங்கியில் ஒப்படைத்துதவவும். சன்மானம் வழங்கப்படும். (83880)

நாவடி தெற்கு, பத்திரகாளி கோயிலடியை சேர்ந்த சுப்பிரமணியம் முத்துராசா என்பவருடைய தே.அ.அட்டை (இல.550204134V), வி.அ.அட்டை (இல.0906011075) என்பன 04.02.2001 அன்று பேசுடன் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் மேலுள்ள விலாசத்தில் ஒப்படைத்து உதவவும். (83887)

### விற்பனைக்கு

**27"Sony T.V., G.-12** டெக், **YAMAHA MATE 90** மோட்டார் சைக்கிள், குளிர் சாதனப் பெட்டி, மீன் தொட்டி மற்றும் சகலவித வீட்டுத் தளபாடங்களும் விற்பனைக்குண்டு. தொடர்பு: 131, அரசடி வீதி, கந்தர் மடம் சந்தியருகில். (83889)

### நாய்க்குட்டி விற்பனைக்கு

இரண்டுமாதம் நிரம்பிய வெள்ளை நிற பொமனேரியன் பெண் நாய்க்குட்டி விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 124, கோயில் வீதி, **I.C.R.C.** அருகில், யாழ்ப்பாணம். (83882)

பூச்சி நீக்கப்பட்ட 40 நாள்கள் நிரம்பிய நல்ல இன அல்சேஷன் நாய்க் குட்டிகள் விற்பனைக்குண்டு. தொடர்பு: மு.ஜயந்தி, சண்டிலிப்பாய் வடக்கு, சண்டிலிப்பாய். (83859)

### T.V. விற்பனைக்கு

**SONY 2068, 2090, 2092 (20"), SONY 14"** (கலர்),**SONY 12"** (கறுப்பு வெள்ளை) **A/C D/C, SINGER 12"** (கறுப்பு வெள்ளை)**A/C D/C, GOLD-STAR** (கறுப்பு வெள்ளை) முதலியன விற்பனைக்கு உண்டு. தொடர்பு: **N.T.** ராஜன், 140, கே.கே.எஸ். வீதி (சத்திரத்துச் சந்தி முனபாக), யாழ்ப்பாணம். (83584)


**சைவ கல்வி நிலையம்**

உடுவில்

**A/L 2002**

**குறியீட்டு அளவையியல்**

**திரு.S.சயந்தன்**

**ஆரம்பம்:-**

**வெள்ளி-3.30** (83890)


மணிவிழாக் கண்ட நாயகன்



**பேராசிரியர் அ.சண்முகதாஸ்** அவர்கள்

செந்தமிழறிஞர்கள் சேர்ந்து புகழ்ந்திடும்
சீலம் மிகுந்தவரை
நந்தமிழ் வைத்தியம் நனி சிறந்திடவே
நல்லன செய்பவரை
தேந்தமிழின்பத் தமிழுரை யாற்றி
தேன் பாயச் செய்பவரை
இந்தமிழ் நாட்டினில் பல்லாண்டு வாழவே
வாழ்த்துவோம் நாமினிதே

**D.A.M.** *வைத்தியர்கள் சங்கம்,*
*யாழ்ப்பாணம்.*
(83852)

## கண்ணீர் அஞ்சலி

**திரு.ந.துரைராசசிங்கம்**
(**ISA,** வலிகாமம் கல்வி வலயம்)
அவர்களின் அன்புத் தந்தையார்

**வையிரமுத்து நல்லதம்பி**

05-02-2001 அன்று இறைபதம் அடைந்தமையையிட்டு, அன்னாரின் குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அவரது ஆத்ம சாந்திக் காகவும் பிரார்த்திக்கின்றோம்.

நலன்புரிக் கழகம்,
வலிகாமம்
வலயக் கல்வித் திணைக்களம்.

*மருதனார்மடம்.* (83870)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

மலர்வு 18 - 04 - 1910



உதிர்வு 12 - 01 - 2001

**அமரர் சுப்பிரமணியம் நாகலிங்கம்**
(அனலைதீவு)

எமது குடும்பத் தலைவர் இறைவனடி சேர்ந்த செய்தி அறிந்து நேரில் வந்து ஆறுதல் கூறியோருக்கும், முன்னின்று உதவிகள் பல புரிந்த உற்றார், உறவினர், நண்பர்கள் மற்றும் தொலைபேசி, தொலைநகல், தந்தி மூலம் அனுதாபம் தெரிவித்தோருக்கும் அன்னாரின் இறுதிக் கிரியைகளில் கலந்த கொண்டோருக்கும் எமது இதயங் கலந்த நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அன்னாரின் அந்தியேட்டிக்கிரியைகள் நாளை (09.02.2001) வெள்ளிக்கிழமை காலை வில்லூன்றி புனித தீர்த்தக் கரையிலும், சபிண்டீகரணக் கிரியைகள் 11.02.2001 ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்கு கில்னர் ஒழுங்கை இல்லத்திலும் நடைபெறும்.

அத்தருணம் தாங்கள் வருகை தந்து சிறப்பித்து மதிய போசனத்திலும் பங்குகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**மனைவி, மக்கள்,**
**மருமக்கள், பேரப்பிள்ளைகள்,**
**பூட்டப்பிள்ளைகள்.**

*வே.ஐயம்பெருமாள்,*
*16,கில்னர் லேன்,*
*யாழ்ப்பாணம்.*
(83883)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

எங்கள் கிராமத்தின் புதல்வன்

**உயர்திரு.வே.பொ.பாலசிங்கம்**

அவர்கள் வடக்கு - கிழக்கு உள்ளூராட்சி ஆணையாளராகப் பதவி உயர்வு பெற்றதையிட்டு அனலை ஐயப்பன் துணையோடு அவரின் சேவை மேன்மேலும் சிறப்புற பாராட்டி வாழ்த்துகின்றோம்.

சின்னவன் பூமிசேகரன்
குடும்பத்தினர்.

5ஆம் வட்டாரம்,
அனலைதீவு.
(83863)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

பிறப்பு 05 - 08 - 1921



இறப்பு 10 - 01 - 2001

**திருமதி வீரகத்தி செல்வநாயகம்**

அன்பின் உருவமாய்
ஆசையுடன் எமை வளர்த்து
இன்பவாழ்வு தந்த
அம்மாவே! விண்ணுலகம் போனாயோ?

அன்னாரது அந்தியேட்டிக்கிரியைகள் நாளை (09-02-2001) வெள்ளிக்கிழமை நடைபெறும். இந்நிகழ்வில் தாங்கள் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்தியடையப் பிரார்த்திப்பதுடன் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

கணவர், பிள்ளைகள் மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

நிரந்தர முகவரி:
*சரசாலை தெற்கு,*
*சாவகச்சேரி.*
***E.V.K*** *ற்றான்போட்ஸ்*

(83885)

தற்காலிக முகவரி:
*சம்பந்தர் கடையடி,*
*கரவெட்டி மத்தி,*
*கரவெட்டி.*

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

மலர்வு 12 - 02 - 1934



உதிர்வு 09 - 01 - 2001

**அமரர் சின்னப்பு இரத்தினசபாபதி**
**(சின்னராசா)**
**(08.02.2001)**

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்த வானிலுறை தெய்வமே!
மாதமோ ஒன்றாகின்றது. நம்மனதிலே வேதனையோ
விலகவில்லை.
வளமாக வாழ்கின்றோம் ஆனால் வழிசமைத்த நீயோ
இங்கில்லை.
விழிகள் தேடும் இடமெல்லாம் உந்தன் விம்பம் தானே தெரிகிறது.

09-01-2001 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர் அமரர் சின்னப்பு இரத்தினசபாபதி அவர்களின் இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கும், நேரிலும் தொலைபேசி மூலமும் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் மற்றும் பல்வேறு வழிகளில் உதவியோர்களுக்கும் எமது இதய பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இன்று (08-02-2001) வியாழக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளிலும், சபிண்டீகரணத்திலும் கலந்து கொள்ளுமாறு தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

பிரிவால் துயருறும்
**மனைவி, மக்கள்.**

*போக்காலை வீதி,*
*உடுப்பிட்டி.*
(83811)

# தென்மராட்சிக்கு ஈ.பி.டி.பி. குழு விஜயம்

## மீள்குடியமர்வு குறித்து ஆராய்வு

### இராணுவ அதிகாரிகளுடன் பேச்சு

யாழ்ப்பாணம், பெப். 8

தென்மராட்சிப் பகுதி மக்களை மீளக்குடியமர்த்துவது தொடர்பாக ஆராயும் பொருட்டு ஈ.பி.டி.பி அமைப்பின் குழு ஒன்று தென்மராட்சிப் பகுதிக்கு கடந்த ஞாயிற்றுக்கிழமை விஜயம் செய்தது.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் பணிப்பின் பேரில் சென்ற இக் குழுவினர் அங்கு சேதமடைந்துள்ள வீடுகள், கட்டடங்கள் மற்றும் பாடசாலைகளைப் பார்வையிட்டனர்.

தென்மராட்சிப் பிரிவுக்குப் பொறுப்பான படை அதிகாரிகளையும் இக்குழுவினர் சந்தித்துப்பேச்சு நடத்தினர். இச்சந்திப்பின் போது தென்மராட்சி மக்களை மீளக்குடியமர்த்துவது தொடர்பாகவும் அவர்கள் கலந்துரையாடினர் எனத் தெரிவிக்கப்பட்டது.

ஈ.பி.டி.பி. அமைப்பின் யாழ்.மாவட்ட பிரதி அமைப்பாளரும், ஊர்காவற்றுறைப் பிரதேச சபைத் தலைவருமான ந. மதனராஜன் தலைமையில் வலி.மேற்கு பிரதேச சபைத் தலைவர் என். திரிலோகநாதன், பருத்தித்துறை பிரதேச சபைத் தலைவர் ஐ சிறீரங்கேஸ்வரன், வலி. தென்மேற்கு பிரதேச சபைத் தலைவர் வெலிச்சோர் அன்ரன் ஜோன்சன், தென்மராட்சி அமைப்பாளர் சார்ள்ஸ், வலி.வடக்கு பிரதேச சபை உறுப்பினர் வேலு ஆகியோர் அடங்கிய குழுவினரே தென்மராட்சிப் பகுதிக்கு விஜயம் செய்தனர்.

சாவகச்சேரி நகரத்தில் தபால் கந்தோர் வீதி உட்பட சில பகுதிகளில் மக்களை மீளக்குடியமர்த்த முடியும் என்று இக்குழுவினரிடம் படை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

மிருசுவில் தொடக்கம் சாவகச்சேரி நகரம் வரையும் வெடிப்பொருள்கள் அகற்றப்பட்டு விட்டன என்றும் ஏனைய பகுதிகளில் துப்புரவுப் பணிகள் தொடர்ந்து கொண்டிருக்கின்றன என்றும் இராணுவத்தினர் இக் குழுவினரிடம தெரிவித்ததாகக் கூறப்பட்டன.

அங்கு விஜயம் செய்த ஈ.பி.டி.பி குழுவினர் தென்மராட்சி மக்களின் மீள்குடியமர்வு தொடர்பாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்கு விரைவில் அறிக்கை ஒன்றைச் சமர்ப்பிக்கவுள்ளனர்.

(க-5-6-173-றி)

## தொலைத் தொடர்பு கோபுர வேலைகள் பண்ணையில் ஆரம்பம்

யாழ்ப்பாணம், பெப். 8

யாழ். ரெலிக்கொம் நிறுவனத்திற்கென பண்ணையில் புதிதாகதொலைத் தொடர்பு கோபுரம் அமைக்கும் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

சுமார் 550 அடி உயரத்தைக் கொண்ட தொலைத் தொடர்புக் கோபுரம் அமைக்கும் பணி தற்போது துரித கதியில் இடம்பெற்று வருகின்றது.

( க— 17 )

## எழுதுநர் பரீட்சை முடிவுகள் வந்தன

குருநகர், பெப். 8

மாகாண பொதுச் சேவையைச் சேர்ந்த எழுதுநர்களை தரம் II 'அ'விற்குப் பதவியுயர்த்துவதற்காக சென்ற வருடம் பரீட்சைத் திணைக்களத்தால் நடத்தப்பட்ட பதவியுயர்வுப் பரீட்சை முடிவுகள் வடக்குக் கிழக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவினால் சம்பந்தப்பட்ட பரீட்சார்த்திகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

(ம-51)

## விபத்தில் மாணவி படுகாயம்

தென்மராட்சி, பெப் 8

நெல்லியடி சந்தியில் இடம்பெற்ற லொறி — சைக்கிள் விபத்தில் படுகாயமடைந்த மாணவி ஆபத்தான நிலையில் மந்திகை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

வியாழக்கிழமை இடம்பெற்ற இவ் விபத்தில் கரவெட்டி வதிரியைச் சேர்ந்த சிவராசா வத்சலா (வயது 17) என்பவரே படுகாயமடைந்தவராவார்.

நெல்லியடிப் பொலிஸார் லொறியுடன் சாரதியையும் தடுத்து வைத்துள்ளனர்.

(க-173-117)

## கழற்றிய ஓடுகளை கைவிட்டுச் சென்ற திருடர்கள்

கோண்டாவில், பெப் 8

மீளக்குடியமர அனுமதிக்கப்பட்டுள்ள அரியாலைப் பகுதியில் திருடர்களின் தொல்லை நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு திருடர்களைக் கலைத்துச் சென்ற பொதுமக்களை அவர்கள் தாக்கிவிட்டு கழற்றிய ஓடுகளையும் கைவிட்டுத் தப்பிச் சென்றுள்ளனர்.

வீடுகளைப் பார்வையிடச் செல்வதாகக் கூறிச் செல்பவர்களும் கூட ஏனையோரின் கதவுகள் மற்றும் உடைமைகளை எடுத்துச் செல்கின்றனர் என்று புகார் கூறப்படுகிறது.

அரியாலைப் பகுதியில் கிராம அலுவலர்கள் இன்றியே பொதுமக்கள் உட்செல்ல அனுமதிக்கப்பட்டு வருவதாலேயே திருட்டுக்கள் அதிகமாக நடந்துள்ளன என்று கூறப்படுகிறது.

(க-86)

# மீன்பிடிக்கும் நேரம், தூரம் அதிகரிக்கப்பட வேண்டும்

### குருநகர் கடற்றொழிலாளர் சங்கம் மகஜர்

குருநகர், பெப். 8

குடாக்கடலில் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டுவரும் மீனவர்களின் நன்மை கருதி, மீன்பிடிப்பதற்கு அனுமதிக்கப்பட்டுள்ள நேரம் மற்றும் தூரம் ஆகியவற்றை அதிகரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

குருநகர் கடற்றொழிலாளர் அபிவிருத்திச் சங்கம் J12 ஆவது படைப் பிரிவுத் தளபதிக்கு அனுப்பி வைத்துள்ள மகஜரில் இவ்வாறு தெரிவித்துள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

குருநகர்ப் பகுதியில் 3000 துக்கும் மேற்பட்ட குடும்பங்கள் வாழ்ந்து வருவதுடன் அவர்களில் சுமார் 1800 மீனவர்கள் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர். இம் மீனவர்கள் சுமார் 300 வள்ளங்களைப் பயன்படுத்தியே தொழிலில் ஈடுபடுகின்றார்கள்.

மீன்பிடிக்கத் தற்போது விதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாடு காரணமாக மீனவர்கள் பலர் நோயாளர்களாக மாறி வருகிறார்கள். இத் தடைகள் காரணமாக, யுத்த சூழ்நிலை காரணமாக இடம்பெயர்ந்து சென்றுள்ள எமது பகுதிக் குடும்பங்கள் சில இன்னமும் எமது பகுதியில் மீளக் குடியேறவில்லை.

மீன்பிடிக்கும் நேரம் காலை 5.00 மணி தொடக்கம் மாலை 5.00 மணிவரை நீடிக்கப்படவேண்டும் அத்துடன் தற்போது மீன்பிடிக்க அனுமதிக்கப்பட்டுள்ள கடல் எல்லை மிகவும் குறுகியதாக உள்ளது. எனவே இக் கடல் எல்லை மேலும் விஸ்தரிக்கப்படவேண்டும்.

மீனவர்கள் வள்ளங்களில் கம்புகள் மூலம் வலித்துச் சென்றே மீன்பிடிக்க அனுமதிக்கப்பட்டுள்ளார்கள். காற்றை எதிர்த்து மீனவர்கள் கம்புகள் மூலம் வள்ளங்களை வலித்துச் செல்வதனால் அவர்களுக்கு உடல் ரீதியாகப் பாதிப்பு ஏற்பட்டு நோயாளர்களாகின்றனர். இதனைத் தடுக்க முன்னர் அனுமதித்தது போன்று பாய் பயன்படுத்தி மீன் பிடிக்க அனுமதிக்கப்பட வேண்டும்.

உங்களது உடனடி நடவடிக்கை எமது தொழிலாளர்களின் கஷ்டங்கள் நீங்க வழி ஏற்படுத்துவதுடன் அவர்கள் மீளவும் எமது பகுதியில் பூரணமாக வந்து குடியேறவும் வழிசமைக்கும். இப்படி அந்த மகஜரில் மேலும் கூறப்பட்டுள்ளது. (ம-51)

### நிவாரணத்துக்கு வழங்கப்பட்ட

## உழுத்துப்போன அரிசியை மாற்றி விநியோகிக்குமாறு பணிப்பு

நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் வழங்கப்பட்டுவரும் நிவாரணத்திற்கான அரிசி தரமற்றதாகக் காணப்படுவதாக பொதுமக்கள் முறைப்பாடு தெரிவித்துள்ளனர்.

நல்லூர் ப.நோ.கூ.சங்க கோண்டாவில் கிளையில் பொது மக்களுக்கு வழங்கப்பட்ட அரிசி உழுத்துப்போய் வண்டுகளுடன் காணப்பட்டதை பிரதேச செயலாளரின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டது. அதைத் தொடர்ந்து உரிய அரிசியை மாற்றி வழங்கும்படி பிரதேச செயலாளர் பணித்தார்.

[க-86]

# விளையாட்டு நிகழ்வுகள்

வலி.வடக்கு, பெப். 8

கரவெட்டி பிரதேச செயலர் பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக்கழகங்களுக்கு இடையேயான உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியில் நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.30மணிக்கு அல்வாய் மனோகரா விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெறவுள்ள ஆட்டங்களில் பங்கு பற்றும் அணிகளின் விவரம் வருமாறு:—

இமையாணன் மத்தி வி.க. எதிர் பொமர்ஸ் வி.க.

நியூட்டன் வி.க. எதிர் அண்ணா சிலையடி வி.க.

(க-86)

★ ★ ★

கோப்பாய், பெப். 8

கோப்பாய்ப் பிரதேச செயலர் பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையேயான வலைபந்தாட்ட அரை இறுதிப் போட்டி இன்று வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறும்.

ஆட்டங்களின் விவரம் வருமாறு:-

புத்தூர் வினஸ் வி.க. எதிர் கோப்பாய் ஐக்கிய வி.க.

புத்தூர் எவெரெட் விளையாட்டுக்கழகம் எதிர் நீர்வேலி ஐக்கிய விளையாட்டுக்கழகம்.

[க-72]

நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக்கழகங்களுக்கு இடையேயான பெண்களுக்கான கபடிப்போட்டிகள் நாளை வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு கொக்குவில் மஞ்சவனப்பதி முருகன் கோயிலுக்கு அருகில் நடைபெறும்.

திருநெல்வேலி கலாமன்ற விளையாட்டுக்கழகம் நல்லூர் சீசொக்ஸ் விளையாட்டுக்கழகத்துடன் மோதும்.

(க-86)

★ ★ ★

பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையேயான மென்பந்து கிரிக்கெட் இறுதிப் போட்டிகள் நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு திக்கம் இளைஞர் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெறும்.

(க—86)

★ ★ ★

பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையேயான உதைபந்தாட்டப் போட்டிகளின் இறுதி ஆட்டம் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு திக்கம் இளைஞர் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெறும்.

(ம—86)

### திருச்செல்வம் கைது தொடர்பாக

## பருத்தித்துறை பிரதேச சபைத் தலைவர் விசாரிக்கப்பட்டார்

வடமராட்சி, பெப். 8

பத்திரிகையாளர் அ. திருச்செல்வம் கைது செய்யப்பட்ட விவகாரம் தொடர்பாக கொழும்பிலிருந்து வந்த பயங்கரவாதத் தடுப்பு விசாரணைப் பிரிவினரால் பருத்தித்துறை பிரதேச சபைத் தலைவர் ஐ ஸ்ரீரங்கேஸ்வரன் விசாரணைக்குட்படுத்தப்பட்டார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை புலோலி அலுவலகத்தில் பிரதேசசபைத் தலைவரை விசாரணைக்கு உட்படுத்தி திருச்செல்வம் தொடர்புடைய விவரங்களைக் கேட்டு அறிந்ததுடன் முக்கிய ஆவணங்களையும் அவர்கள் பெற்றுச் சென்றுள்ளனர்.

திருச்செல்வம் பருத்தித்துறை பிரதேச சபை பொது நூல் நிலைய பிரதம நூலகராகக் கடமையாற்றி வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை பிரதம நூலகர் தடுத்து வைக்கப்பட்டுள்ளதால் நூலகசேவைகள் பாதிக்கப்படுவதால் இவரின் விசாரணையைத் துரிதப்படுத்தி விரைவில் விடுதலை செய்யுமாறு பிரதேச சபைக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றி பிரதிப் பாதுகாப்பு அமைச்சருக்குக் கடிதம் அனுப்பப்பட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

(க-117-173-09)

## ஆடு திருடியவருக்கு 3 ஆயிரம் ரூபா பிணை

தென்மராட்சி, பெப். 8

மந்துவில் வடக்குப் பகுதியில் ஆடுகள் திருடியதாகச் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட ஒருவரை கொடிகாமம் பொலிஸார் சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றில் ஆஜர் செய்தனர்.

சந்தேக நபரை 3 ஆயிரம் ரூபா காசுப்பிணையிலும் 5 ஆயிரம் ரூபா பெறுமதியான இரண்டு ஆள் பிணையிலும் செல்ல நீதிவான் அனுமதி வழங்கினார். சந்தேக நபரை மரணிக்கு அப்பால் நீதிமன்றின் அனுமதியின்றி செல்லக்கூடாது என தடை விதித்த நீதிவான் தற்போது தங்கியுள்ள பிரிவு கிராம அலுவலர் அலுவலகத்தில் திங்கள் காலை 9.00மணிக்கும் 12.00 மணிக்கும் இடையில் கையொப்பமிட வேண்டும் என்றும் உத்தரவிட்டார்.

மந்துவில் வடக்கைச் சேர்ந்த சின்னையன் தங்கராசா என்பவரே நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டவராவார்.

(க-117)

## சம்பளம் இதுவரை வந்து சேரவில்லை

வலி.வடக்கு, பெப். 8

யாழ். மாவட்ட விளையாட்டு உத்தியோகத்தர்களுக்கான கடந்த மாதச் சம்பளம் இதுவரை வழங்கப்படவில்லை.

வடக்கு-கிழக்கு மாகாண சபையில் இருந்து மாதாந்தம் அனுப்பி வைக்கப்படும் சம்பளம் இதுவரை அனுப்பி வைக்கப்படவில்லை.

வடக்கு-கிழக்கு மாகாணக் கல்வி, கலாசார, பண்பாட்டு அலுவல்கள் அமைச்சின் கீழ் இருந்த விளையாட்டு அமைச்சு தனித்திணைக்களமாக அண்மையில் மாற்றப்பட்டது குறிப்பிடத்தக்கது.

(க-86)

## எல்லேப் போட்டியில் சம்பியனாக தெரிவு

வலி. வடக்கு, பெப் 8

நல்லூர்ப் பிரதேச செயலர் பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையே நடைபெற்ற எல்லே இறுதிப் போட்டியில் ஆண்கள் பிரிவில் அரியாலை ஐக்கிய விளையாட்டுக்கழகமும், பெண்கள் பிரிவில் கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக்கழகமும், சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளன. ஆண்கள் பிரிவில் 2 ஆம் இடத்தை கொக்குவில் மத்திய சனசமூக நிலையம் பெற்றுக் கொண்டது.

(க-86)

## நல்லூர் வணிகர் கழகம்
## பொதுக் கூட்டமும் நிர்வாகசபைத் தெரிவும்

காலம்: 18-02-2001 ஞாயிற்றுக்கிழமை
நேரம்: காலை 10 30 (ஸ்ரீலங்கா நேரம்)
இடம்: Y.M.H A. கட்டடம், திருநெல்வேலிச் சந்தி.

சகல வர்த்தக உரிமையாளர்களையும் தவறாது சமுகம் தரும்படி அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

நல்லூர் வணிகர் கழகம்.

ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி கிழக்கு,
யாழ்ப்பாணம். (83905)


## கண்ணீர் அஞ்சலி

யா / இராமநாதன் கல்லூரி
ஓய்வுபெற்ற ஆசிரியை
திருமதி வை. கணேசபிள்ளை
அவர்களின் அன்புத் தாயார்

### திருமதி அன்னப்பிள்ளை தம்பையா

அவர்கள் இறைபதம் அடைந்தமையையிட்டு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்
பழைய மாணவர் சங்கம்,
பாடசாலை அபிவிருத்திச் சபை.

யா / இராமநாதன் கல்லூரி,
சுன்னாகம். (சி/15212)

## ஓராண்டு நினைவஞ்சலி



மண்ணுலகில் 19 — 09 — 1922
விண்ணுலகில் 21 — 01 — 2000

### திருமதி நாகம்மா கனகரத்தினம்

திதி: 08 - 02 - 2001

ஆண்டொன்று ஓடியது அன்பே உமைப்பிரிந்து
ஆழ்சோகம் இன்றுவரை குறையவில்லை.
பூண்டதினம் பூமியிலே புனிதமாய் உங்களுக்கு
புரிகின்ற கடன் இன்று காண்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

-- குடும்பத்தினர்.

ஆராச்சியார் வளவு,
கொக்குவில் கிழக்கு. (83867)

## மரண அறிவித்தல்

### இராமலிங்கம் நல்லம்மா

மீசாலை தெற்கு, வாகையடியைப் பிறப்பிடமாகக் கொண்ட இராமலிங்கம் நல்லம்மா நேற்று (07—02—2001) புதன்கிழமை சிவபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற இராமலிங்கம் (வட்டுப்பிள்ளை) அவர்களின் அன்பு மனைவியும்; திருமதி குணவதி ஜெயராஜ்யின் (கனடா) அருமைந் தாயாரும், கோபிநாந் கீர்த்திகா (கனடா) ஆகியோரின் அன்பு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08—02—2001) வியாழக்கிழமை தற்போது வதியும், மகாத்மா லேன், நெல்லியடி இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் வதிரி ஆலங்கட்டை மயானத்துக்கு தகனத்துக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
ந. தங்கம் (மருமகன்)

தற்போதைய முகவரி!
மகாத்மா லேன்,
நெல்லியடி. (சி/15214)

## பூங்கன்றுகளின் கண்காட்சி

திருநெல்வேலி இராமலிங்கம் வீதியில் (முடமாவடி) அமைந்துள்ள பூங்கனிச் சோலையின் பூங்கன்றுகளின் கண்காட்சி எதிர்வரும் சனிக்கிழமையும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமையும் காலை 8மணி தொடக்கம் இரவு 9 மணி வரை நடைபெறவுள்ளது.

பூங்கன்றுகள் மற்றும் கனி மரங்களின் விற்பனையும் அங்கு இடம்பெறும்.

இலவசமாக நடைபெறுகின்ற இக்கண்காட்சியைக் கண்டுகளிக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-10)

## சிவராத்திரிக்கு ஊரடங்கை தளர்த்துக

எதிர்வரும் 21 ஆம் திகதி அனுஷ்டிக்கப்படவிருக்கும் சிவராத்தி தினத்தன்று மக்கள் ஆலயங்களுக்கு வழிபாட்டுக்குச் செல்வதால் அன்று ஊரடங்கைத் தளர்த்தவேண்டும் என்று தமிழர் விடுதலைக் கூட்டணி யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வீ. ஆனந்தசங்கரி யாழ். மாவட்டப் படைத் தளபதி மேஜர் ஜெனரல் அன்ரன் விஜயேந்திரா விடம் கோரியுள்ளார்.

அன்றைய தினம் இரவு முழுவதும் ஆலயங்களில் மக்கள் நித்திரை விழித்து சமய நிகழ்ச்சிகளில் பங்கு பற்றுவது வழமை. எனவே அன்றைய தினம் இரவு நேர ஊரடங்கை நீக்கவேண்டும் என்று படைத் தளபதியிடம் ஆனந்தசங்கரி கேட்டுள்ளார். (ஐ-3)

## மெய்வல்லுநர் போட்டி பரீட்சை

இலங்கை மெய்வல்லுநர் சங்கம் நடத்தும் தொழில் நுட்பஉத்தியோகத்தர்களைத் தெரிவுசெய்வதற்கான போட்டிப் பரீட்சை நாளை மறுதினம் சனிக்கிழமை வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இந்தப் பரீட்சையில் தோற்றுபவர்களின் அனுமதி அட்டைகளை யாழ். கஸ்தூரியார் வீதியில் அமைந்துள்ள அருண் ஸ்போட்ஸ் ஸ்பொட்டில் பெற்றுக்கொள்ள முடியும் என்று சங்கத்தின் தலைவர் அறிவித்துள்ளார்.

இந்தப் பரீட்சைக்கான வழிகாட்டல் கருத்தரங்கு இன்று பிற்பகல் 4 மணி முதல் 6மணி வரை யாழ் இந்துக் கல்லூரியில் இடம் பெறவுள்ளது. (ஐ-3)

## பவள விழாவையொட்டி கல்விக் கண்காட்சி

பண்ணாகம் மெய்கண்டான் மகா வித்தியாலயத்தின் பவள விழாவை ஒட்டிய கல்விக் கண்காட்சியிம் நூலகத் திறப்பு விழாவும் இன்று வியாழக்கிழமை காலை 8.30 மணிக்கு பாடசாலை அதிபர் கா. நடராசா தலைமையில் நடைபெறும்.

ஆசியுரையை வழக்கம்பரை அம்பாள் தேவஸ்தானத்தின் சு. சுந்தரராஜக் குருக்களும், வாழ்த்துரையை வலி மேற்கு பிரதேச சபைத் தலைவர் ந. திரிலோகநாதனும் வழங்குவர். வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் வி. இராசையா கண்காட்சியை திறந்து வைப்பார். கல்வித் திணைக்கள பொறியியலாளர் ஜீ. சிவபாலன் நூலகத்தைத் திறந்து வைப்பார். (க-28)

## உதைபந்தாட்டம்

யாழ். பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட கழகங்களுக்கிடையிலான உதைபந்தாட்டச்சுற்றுப் போட்டியில் யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் இன்று பிற்பகல் 4. 00 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் கலைவாணி வி. கவும் பாடும்மீன் வி. கவும் மோதுகின்றன. (ஐ-3)

## சாவகச்சேரி வர்த்தகர்கள் நஷ்டஈடு பெறப் பெரும்பாடு
### பொலிஸ் அறிக்கைக்கு அலைகின்றனர்

தென்மராட்சி, பெப். 8

யுத்த அனர்த்தங்களால் வர்த்தக நிலையங்களில் தமது உடைமைகளைக் கைவிட்டு நிர்க்கதிக்கு உள்ளாகியுள்ள சாவகச்சேரி நகர்ப்பகுதி வர்த்தகர்கள், தமக்கு ஏற்பட்ட இழப்புகளுக்கு நஷ்டஈடு பெற்றுக் கொள்வதற்கான பொலிஸ் அறிக்கை பெற்றுக் கொள்வதற்காக வாரக் கணக்கில் அலைந்து திரிவதாகப் புகார் கூறுகின்றனர்.

வர்த்தக நிலையங்களில் கைவிடப்பட்ட வியாபாரப் பொருள்கள், உடைமைகள் ஆகியவற்றால் ஏற்பட்ட இழப்புகளின் மொத்தப் பெறுமதியை கிராம அலுவலர், பிரதேச செயலர் ஆகியோர் உறுதிப்படுத்திய நஷ்டஈட்டு அறிக்கையை பொலிஸ் நிலையத்தில் பதிவு செய்வதற்கு பொலிஸார் பின்னடிப்பதாக அவர்கள் தெரிவிக்கின்றனர்.

வலிகாமம் பகுதியில் தங்கியுள்ள சாவகச்சேரி வர்த்தகர்கள், பொலிஸ் அறிக்கை பெறுவதற்காக தினமும் கொடிகாமம் சென்று ஏமாற்றத்துடன் திரும்பி வருகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டது.

வர்த்தகர்களில் சிலரின் இழப்பீட்டுப்படிவம் பெற ஒரு மாதமாகியும் திருப்பி வழங்கப்படவில்லை என்றும் இன்னும் சிலரின் படிவங்களைப் பெற்றுக்கொள்ளமால் காலம் தாழ்த்தப்பட்டு வருகிறது என்றும் வர்த்தகர்கள் கவலையுடன் தெரிவித்தனர்.

வர்த்தகர்களால் சமர்ப்பிக்கப்பட்ட இழப்பீட்டு விண்ணப்பங்கள் சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றத்தினால் மீளாய்வு செய்யப்பட்டு வழங்கிய தொகையை நஷ்டஈடாக பெற்றுக் கொள்வதற்கு தென்மராட்சி பிரதேச செயலரும் சாவகச்சேரி நகர கிராம அலுவலரும் சிபார்சு செய்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. [க-117]

## பாஷையூர் மீன் சந்தை இயங்கும்

யாழ்ப்பாணம், பெப். 8

பாஷையூர் மீன் சந்தை மீண்டும் நாளை மறுதினம் சனிக்கிழமை முதல் பழைய இடத்தில் இயங்கும் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-3)

## அலங்கார உற்சவம்

யாழ்ப்பாணம், பெப். 8

திருநெல்வேலி கிழக்கு ஸ்ரீ பூதநாதசுவாமி (பூதவராயர்) ஆலய அலங்கார உற்சவம் தற்போது நடைபெற்று வருகிறது.

உற்சவத்தின் இறுதி நாள் தெரு வீதி உலா நாளை வெள்ளிக்கிழமை மாலை நடைபெறவுள்ளது.

திருநெல்வேலி கிழக்கு, கல்வியங்காடு பகுதிகள் ஊடாக சுவாமி தெரு வீதி உலா வருவார்.

அலங்கார உற்சவ நாள்களில் 'மகா பாரதம்' தொடர் சொற்பொழிவும் ஆலயத்தில் நடைபெற்றுவருகிறது. (ஐ)

## நயினைஸ்ரீகணேசா முதலாம இடம்

வேலணைப் பிரதேச செயலாளர் பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையேயான வலைப்பந்தாட்டப் போட்டியில் நயினாதிவு ஸ்ரீ கணேசா விளையாட்டுக்கழகம் முதலாம்இடத்தையும், வேலணை துறையூர் ஐயனார் விளையாட்டுக் கழகம் இரண்டாம் இடத்தையும்பெற்றுக்கொண்டன. (க-86

## மரண அறிவித்தல்

### சிவராசா இராசேந்திரன்

ஆஸ்பத்திரி வீதி சங்கானையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் ஜேர்மனி - முன்சனில் வசித்து வந்தவரும் காலஞ்சென்ற முன்னாள் வர்த்தகர் வி. சிவராசா – செல்லம்மா ஆகியோரின் புத்திரனும் அம்பனை சுன்னாகம் மேற்கைப் பிறப்பிடமாகக் கொண்டவருமான சிவராசா இராசேந்திரன் 06 – 02 – 2001 செவ்வாய்க்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் ராஜினியின் (கனடா) அன்புக் கணவரும் ரஜீனன், ரதுனன், ரஜிந்தா (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், செல்லத்துரை – தவமணி ஆகியோரின் மருமகனும் திரு திருமதி தர்மராசா (சிறி) சிலோனி (ஆசிரியை, யாழ். இராமநாதன் கல். சுன்னாகம்), ஈஸ்வரன் (ஜேர்மனி), இருஸ்ணா (டோகா), சிறீக்கணேசா (கனடா), கதிரினி (வவுனியா மகளிர் மகா வித்தியாலயம்) ஆகியோரின் மைத்துனரும் காலஞ்சென்ற சோமசுந்தரம் கனகம்மா, புஸ்பராணி, செல்வராணி, இந்திராணி, விமலராணி, சுவேந்திரன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் வே. பரமசாமி (இ.போ.ச, காரைநகர்), வ. தங்கவடிவேல் (பிரதம எழுதுவினைஞர், பிரதேச சபை, சங்கானை), மு. கதிரவேலு (முகாமையாளர், கித்தன்ஸ் பான்சி கவுஸ், ஸ்ரேசன் றோட், வவுனியா), சு. மகேந்திரன் (டோகா) ஆகியோரின் மைத்துனரும் சசிகலா (சங்கானை), ஷிரதன் (உக்குரேன்), பிறேமகலா (ஜேர்மனி), புஸ்பகலா, மேகலா (லண்டன்), சுதாகரன் (சுவிஸ்), பத்மலதா, விஜயலதா (வவுனியா) பிரபாகரன் (லண்டன்), இன்பகரன் (மத்திய மகா வித்தியாலயம், வவுனியா), சுயேந்தி (கனடா), கனிஸ்ரிகா, கம்சிகா (வவுனியா) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 11 – 02 – 2001 ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு A/18, சிவன் கோயில் முன் வீதி, சின்னப்புதுக்குளம், வவுனியாவில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் வெளிக்குளம் இந்து மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக் கொள்ளுகிறேன்.

தகவல்:
மு. கதிரவேலு

A/18, சிவன் கோயில் முன் வீதி,
சின்னப்புதுக்குளம்,
வவுனியா. (15210)

## கச்சாய்க்குச் சென்றவேளை
# காணாமற் போனவரின் சடலம் துரவு ஒன்றில் இருந்து மீட்பு!

தென்மராட்சி,பெப்.8

வடமராட்சியிலிருந்து கச்சாய்ப் பகுதியில் உள்ள தமது வீட்டினைப் பார்வையிடச் சென்றபோது காணாமற் போயிருந்த ஆறுபிள்ளைகளின் தந்தை ஒருவர் சுமார் 27 நாள்களின் பின்னர் அங்குள்ள துரவு ஒன்றிலிருந்து அழுகிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டார்.

கச்சாயிலிருந்து இடம்பெயர்ந்து கரவெட்டி கரணவாய் தெற்கு, மாதா கோயிலடி என்னும் முகவரியில் வசித்து வந்த சுப்பிரமணியம் பொன்னம்பலம் (வயது 53) என்பவரின் சடலமே இவ்வாறு மீட்கப்பட்டது.

இச்சம்பவம் தொடர்பாக கொடிகாமம் பொலீஸார் நேற்று சாவகச்சேரி நீதிவானின் கவனத்துக்குக் கொண்டு வந்தனர். இதனையடுத்து சாவகச்சேரி நீதிமன்ற நீதிவான் அ. பிறேம்சங்கர் மற்றும் பருத்தித்துறை மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் சி.கதிரவேற்பிள்ளை ஆகியோர் சம்பவம் இடம்பெற்ற இடத்துக்குச் சென்று விசாரணை நடத்தினர். சடலம் அவரது மனைவியாலும் சகோதரராலும் அடையாளம் காணப்பட்டது.

இடம்பெயர்ந்து வசிக்கும் இவர் அடிக்கடி கச்சாயிலுள்ள தனது வீட்டுக்குச் சென்று தங்கிவிட்டுத் திரும்புவது வழக்கம் என்று மரண விசாரணையின் போது உறவினர்களால் தெரிவிக்கப்பட்டது.

டாக்டர் சி.கதிரவேற்பிள்ளை பிரேத பரிசோதனை செய்தார்.

சடலத்தில் காயங்கள் எதுவும் காணப்படாததாலும் -

சடலம் காணப்பட்ட துரவில் எட்டு அடி உயரத்துக்கு நீர் தேங்கிக் காணப்படுவதாலும் -

சம்பந்தப்பட்டவர் நீரில் மூழ்கியதால் மரணம் ஏற்பட்டிருக்கலாம் என்று அவர் தெரிவித்தார்.

விசாரணையின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

பிரஸ்தாப குடும்பஸ்தர் காணாமல் போனமை குறித்து மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது தெரிந்ததே.

(ஐ-7-5-31-109-117-173)

# நல்லூர் வடக்கில் வீடுகளில் ஊரடங்கு வேளை திருட்டுகள்

யாழ்ப்பாணம்,பெப்.8

நல்லூர் வடக்கு, கல்வியங்காடு, திருநெல்வேலி கிழக்கு பகுதிகளில் திருட்டுச் சம்பவங்கள் அதிகரித்துள்ளன.

ஊரடங்கு அமுலில் இருக்கும் இரவு நேரங்களில் திருடர் கோஷ்டி ஒன்று சுதந்திரமாக நடமாடி தொடராகப் பல திருட்டுகளில் ஈடுபட்டு வருவதாக இப்பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

கடந்த ஞாயிறு இரவும் நேற்று அதிகாலையிலும் நல்லூர் சட்டநாதர் வீதிப் பகுதியில் இரு வீடுகளுக்குள் புகுந்த திருடர்கள் பெறுமதி வாய்ந்த பொருள்களை அபகரித்துள்ளனர்.

நேற்று அதிகாலை 2 மணியளவில் சட்டநாதர் வீதியில் உள்ள ஒரு வீட்டின் யன்னல் கம்பிகளை உலக்கை கொண்டு வளைத்து உள்நுழைந்த திருடர்கள் தொலைக் காட்சிப் பெட்டி வானொலிப் பெட்டி, கைக்கடிகாரங்கள் என்பனவற்றைத் திருடிக் கொண்டு தப்பியுள்ளனர்.

ஊரடங்கு நேரத்தில் திருடர்கள் கைவரிசையைக் காட்டி வருவதால் இப்பகுதி குடியிருப்பாளர்கள் பீதியுடன் இரவுப் பொழுதை கழித்து வருகின்றனர்.

திருடர்கள் தொடர்பாக கோப்பாய் பொலீஸ் நிலையத்தில் முறைப்பாடுகள் செய்யப்பட்டு வருகின்ற போதிலும் திருட்டுக்கள் தொடர்ந்து நடைபெறுகின்றன.

(ஐ)

# 3,819 கல்விசாரா ஊழியருக்கு வடக்கு, கிழக்கில் வெற்றிடங்கள்

கொழும்பு,பெப்.8

வடக்கு,கிழக்கு மாகாண பாடசாலைகளில் 3 ஆயிரத்து 819 கல்விசாரா ஊழியர்களுக்கான வெற்றிடங்கள் இருப்பதாக அண்மையில் எடுக்கப்பட்ட புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன.

1989 ஆம் ஆண்டு 2 ஆயிரத்து 172 வெற்றிடங்களும் 1998 ஆம் ஆண்டு 3 ஆயிரத்து 819 வெற்றிடங்களும் கல்வி சாரா ஊழியர் பகுதியில் இருந்தன.

தற்பொழுது இவ்வெற்றிடங்கள் அதிகரித்து வருவதையிட்டு உடனடியாக குறிப்பிட்ட கல்விசாரா ஊழியர்கள் வெற்றிடங்களை சகல பாடசாலைகளிலும் நிரப்புமாறு மாகாண அமைச்சுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

இந்த உத்தரவுக்கு அமைய பாடசாலைகளில் ஏற்கனவே தற்காலிகமாக கடமையாற்றும் சிற்றூழியர்கள் அனைவரும் நிரந்தர நியமனம் செய்யப்படவுள்ளனர். (க-5)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

தோற்றம்
27
-
12
-
1962



மறைவு
09
-
01
-
2001

## அமரர் குமாரசாமி குணசிங்கம்

எமது அன்புச் சகோதரர் குமாரசாமி குணசிங்கத்தின் இறுதிக் கிரியைகளில் பங்குகொண்ட உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் மற்றும் ஏனைய வழிகளில் உதவி செய்தவர்களுக்கும் குறிப்பாக திருமலை வைத்தியசாலை நிர்வகத்தினர்க்கும், மூதூர் கிராம சேவையாளர் திரு. வீ. முனீஸ்வரன் அவர்களுக்கும் எமக்கு உடனுக்குடன் தொலைபேசி இணைப்புத் தந்து உதவிய சுதுமலை தெற்கு தங்கமுருகன் தொலைத் தொடர்பு நிலைய உரிமையாளருக்கும், குமுதினி சிறுவர் பாலர் பாடசாலை நிர்வாகத்தினர்க்கும் நன்றி கூறுவதோடு, இன்று (08. 02. 2001) வியாழக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் 31 ஆம் நாள் நிகழ்விலும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

பிரிவால் துயருறும்:
**தாயாரும் அன்புச் சகோதரர்களும்**

*சுதுமலை தெற்கு,*
*சாவல்கட்டு.*
(83903)

## இரு படையினர் காயம்

கொழும்பு,பெப்.8

குடாநாட்டில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இருவேறு சம்பவங்களில் இரு படையினர் காயம் அடைந்தனர் என விசேட ஊடகத் தகவல் நிலையம் தெரிவித்துள்ளது.

நாகர்கோயில் முன்னரங்க நிலைகள் மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட மோட்டார் தாக்குதலில் சிப்பாய் ஒருவரும் -

மட்டுவில் வடக்கில் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த சமயம் மிதிவெடியில் சிக்கி மற்றொரு சிப்பாயும் -

காயம் அடைந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-3)

## ஜீ.ஜீ.பொன்னம்பலம் நினைவு தினம் அனுஷ்டிப்பு

யாழ்ப்பாணம்,பெப்.8

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் ஸ்தாபகரும் பிரபல சட்டத்தரணியுமான அமரர் ஜீ.ஜீ. பொன்னம்பலத்தின் 24 ஆவது நினைவு தினம் நாளை வெள்ளிக்கிழமை குருநகரில் அமைந்துள்ள அன்னாரின் உருவச்சிலை முன்றலில் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

நினைவஞ்சலிக் கூட்டம் காலை 8 மணி முதல் விரிவுரையாளர் அ. குமாரவேல் தலைமையில் அங்கு இடம்பெறும். இக்கூட்டத்தில் தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் முக்கிய பிரமுகர்கள் உரையாற்றவுள்ளனர்.

(ஐ-10)

## பாதுகாவலர் சங்க உறுப்பினர்களுக்கு!

யாழ்ப்பாணம்,பெப்.8

யாழ்.மாவட்டத்தில் கைது செய்யப்பட்டு காணாமற்போனோர் பாதுகாவலர் சங்கத்தின் உறுப்பினர்களை நாளை 9ஆம் திகதி மு.ப. 11 மணிக்கு ஐ.நா.நிறுவன பிரதிநிதிகள் சந்தித்து கலந்துரையாட உள்ளனர்.

இக்கலந்துரையாடலில் கலந்து கொள்வதற்காக சங்க நிர்வாக சபை உறுப்பினர்களை யாழ்.அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத்தில் அன்று காலை 9.30 மணிக்கு ஒன்றுகூடுமாறு சங்கச் செயலாளர் எஸ்.சற்குணம் அழைப்பு விடுத்துள்ளார். (ஐ-5)

## விரிவுரைகள் பிற்போடப்பட்டன

கோப்பாய்,பெப்.8

இம்மாதம் 5 ஆம் திகதி ஆரம்பமாகும் என அறிவிக்கப்பட்டிருந்த யாழ். பல்கலைக்கழக சித்த மருத்துவ அனைத்து வருட மாணவர்களுக்குமான விரிவுரைகள் யாவும் மார்ச் 5 ஆம் திகதிக்கு பிற்போடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இடவசதிகள் ஒழுங்கு செய்யப்படாத காரணத்தினாலே விரிவுரைகள் பிற்போடப்பட்டதாகக் கூறப்பட்டது.

இதே வேளை சித்த மருத்துவத் துறை கைதடியில் இருந்து இடம்பெயர்ந்த பின்னர் மாணவர்களுக்கான செய்முறை வகுப்புகள் நடைபெறாததனால் அடுத்துவரும் இறுதிப்பரீட்சைகளுக்கு தோற்றவுள்ள மாணவர்கள் பின்னடைவை எதிர்நோக்கியுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.(ம-72)

## தவறிவிட்டது

305,பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியைச் சேர்ந்த **கந்தையா நாகேந்திரன்** ஆகிய எனது **விசேட அடையாள அட்டை (இல. 0901007502)** இருபாலைக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையில் 06-02-2001 அன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து மேற்படி முகவரியில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும்.

(83911) கந்தையா நாகேந்திரன்


## பொருளியல்

**G.A.Q., 1st in Com.**

ஆரம்பமாகிவிட்டன

**R.இராஜேஸ்வரன்** B.Com

*திங்., வியா., 3 மணி*

*செவ். - 5மணி*

**பிரத்தியேக வகுப்பு**

*கைலாச பிள்ளையார் கோயிலடி, நல்லூர்.*

(சி15213)


# மரண அறிவித்தல்கள்

## தாமோதரம்பிள்ளை ஜெகந்நாதன்

(ஓய்வுபெற்ற பொலீஸ் அத்தியட்சகர், தற்போதைய கணக்காளர் நந்தினி நகைமாடம், கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்)

தாளையடி ஒழுங்கை, திருநெல்வேலி தெற்கைப் பிறப்பிடமாகவும் வாசிகசாலை ஒழுங்கை, 3 ஆம் கட்டையடி கல்வியங்காட்டை வசிப்பிடமாகவும் கொண்ட தாமோதரம்பிள்ளை ஜெகந்நாதன் (ஓய்வு பெற்ற பொலீஸ் அத்தியட்சகர்) 06-02-2001 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தாமோதரம்பிள்ளை - நீலாயதாட்சி தம்பதிகளின் புதல்வனும், திருமதி இராஜேஸ்வரியின் அன்புக் கணவரும், உதயராஜ் (ஜேர்மனி) கீதா (ஜேர்மனி), ஜெயவாணி (வாணி) ஆகியோரின் அன்புத்தந்தையும், ஜெயரத்தினம் (ஓய்வுபெற்ற மதுவரிப்பரிசோதகர்), ஜெயசிங்கம் (A.C.I Ltd, இரத்மலானை), ஜெயகாந்தன் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரரும், யோகேஸ்வரன் (ஜேர்மனி) திருமதி சுவர்ணா, உதயராஜ் (ஜேர்மனி) கஜேந்திரன் (ஸ்ரீலங்கா புத்தகசாலை) ஆகியோரின் அன்பு மாமனாரும், பிரீத்தனின் அன்புப் பேரனுமாவார்.

இன்று (08-02-2001) வியாழன் பிற்பகல் 4.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் இறுதிக் கிரியைகள் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கோண்டாவில் கிழக்கு கோண்டாவில் கட்டைஆலடி பொது மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
க.கஜேந்திரன் (மருமகன்)
ஸ்ரீலங்கா புத்தகசாலை
யாழ்ப்பாணம்.

*3 ஆம் கட்டையடி,*
*கல்வியங்காடு.*
(83899)

## சவரிமுத்து அந்தோனிப்பிள்ளை

உயரப்புலம் ஆனைக்கோட்டையைச் சேர்ந்த சவரிமுத்து அந்தோனிப்பிள்ளை 04-02-2001, ஞாயிற்றுக்கிழமை சுவிசில் காலமானார்.

இவர் ஆரோக்கியத்தின் அன்புக் கணவரும் யேசுராஜா (கனடா), ஜெயவதனி (கொழும்பு), புஸ்பநாதன் (சுவிஸ்), சாந்தகுமார் (சுவிஸ்), சுவன்ரினி (கனடா), அமலதாஸ் (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், லெற்றீசியா, பாக்கியநாதர், ஜெயராணி, ரமோனாவாணி, விக்ரர்குமார், மேரி கொலஸ்ரிக்கா ஆகியோரின் அன்பு மாமனரும் சோபிகா, சனோஜா, சர்மிகா, வில்சன் அன்ரனி, ஸ்ரெனிஸ்ரன், லக்டன், ஸ்ரெவானிக்கா, பிறிசிலா, றிச்சாட், றிச்மன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

இவரின் நல்லடக்கம் இன்று (08-02-2001) வியாழக்கிழமை சுவிசில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் தயவுடன் ஏற்றுக் கொள்ளவும்.

*உயரப்புலம்,*
*ஆனைக்கோட்டை*
(83904)

தகவல்:
செ.மரியதாஸ்

## சின்னத்தம்பி பரமேஸ்வரன்

(இளைப்பாறிய மின் அத்தியட்சகர்- மின்சார சபை- சுன்னாகம்)

சங்கரத்தை வட்டுக்கோட்டையைச் சேர்ந்த சின்னத்தம்பி பரமேஸ்வரன் நேற்று (07-02-2001) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி (ஆசிரியர்)-சிவக்கொழுந்து தம்பதிகளின் அன்பு மகனும் சந்தானலட்சுமியின் அன்புக் கணவரும் இரத்தினசபாபதி(இளைப்பாறிய ஆசிரியர்.யாழ்.இந்துக்கல்லூரி), திருமதி மங்கையர்க்கரசி மயில்வாகனம்(கொழும்பு), அம்பிகைபாகன்(கொழும்பு), ஜெயசிறிகாந்தன்(கனடா), கைலாயநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரரும் வே.சத்தியசீலன், வே.புனிதசீலன், காலஞ்சென்ற வித்தியானந்தசீலன் மற்றும் வே.இந்திரசீலன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08-02-2001) வியாழக்கிழமை பகல் 1.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக வழுக்கையாறு மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*பத்திரகாளி கோயிலடி,*
*சங்கரத்தை,*
*வட்டுக்கோட்டை.*
(83906)

தகவல்:
வே.இந்திரசீலன்
(மைத்துனர்)

## குழந்தைவேலு மார்க்கண்டு

மண்டைதீவைப் பிறப்பிடமாகவும் வேலணை மணியகாரம் வீட்டடியை வசிப்பிடமாகவும் கொண்ட குழந்தைவேலு மார்க்கண்டு ஸ்கந்தபுரத்தில் 06-02-2001 செவ்வாய்க்கிழமை சிவபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற குழந்தைவேலு-இளையபிள்ளை அவர்களின் புத்திரரும் காலஞ்சென்ற மனோன்மணியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற பசுபதிப்பிள்ளை - நாகம்மா தம்பதிகளின் மருமகனும் ஜெயகாந்தன்(இலங்கை மின்சார சபை-வவுனியா), விஜயகாந்தன்(இலங்கை வங்கி மேற்தரக் கிளை-யாழ்ப்பாணம்), லட்சுமிகாந்தன்(ஜேர்மனி), இராஜாமணி, விமலாதேவி(ஜேர்மனி), சிறிகாந்தன்(பிரான்ஸ்), ரோகினிதேவி ஆகியோரின் பாசமிகு தந்தையும் காந்தரூபி, திலகவதி, புஸ்பராணி, நடேசு(ப.நோ.கூ.சங்கம்), ஸ்ரீவாமதேவன், உமாதேவி, தில்லைநாதன் ஆகியோரின் அன்பு மாமனாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (07-02-2001) புதன்கிழமை ஸ்கந்தபுரத்தில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*243, நாவலர் வீதி,*
*யாழ்ப்பாணம்.*
(83898)

தகவல்:
மா.விஜயகாந்தன்
(மகன்)

## திருமதி விசாலாட்சி இராமலிங்கம்

சரவணை மேற்கைப் பிறப்பிடமாகவும், செட்டித்தெரு ஒழுங்கையை வசிப்பிடமாகக் கொண்ட திருமதி விசாலாட்சி இராமலிங்கம் 06-02-2001 அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற இராமலிங்கம் அவர்களின் அன்புத் துணைவியாரும் இ.சுந்தரமூர்த்தி(இளைப்பாறிய சுங்கத் திணைக்கள பணிப்பாளர்), திருமதி இ.கௌரி, திருமதி ப.மனோன்மணி, திருமதி ம.சௌபாக்கிய கௌரி ஆகியோரின் அன்புத்தாயாரும், திரு.நா. இராமச்சந்திரன், திரு. பொ.பரராஜசிங்கம், திரு.இ.மகேஸ்வரன், ஆகியோரின் மாமியாரும், ஞானகௌரி, தர்ஷினி, ஜனார்த்தன், நிர்மலன், நிஷாந்தன், சுபோதினி, காலஞ்சென்ற ஜயதீபன், சுபணா, சாந்தன்,கிரிதரன் ஆகியோரின் பேர்த்தியும், காலஞ்சென்ற நா.சின்னையாபிள்ளையின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08-02-2001) வியாழன் பிற்பகல் 3.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக செம்மணி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நணபர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*63,செட்டித்தெரு ஒழுங்கை,*
*நல்லூர்.*
(83908)

தகவல்:
இ.சுந்தரமூர்த்தி
(மகன்)

## திருமலை கும்பாபிஷேகத்தில் பக்தர் கூட்டம்

திருகோணமலை,பெப்.8

திருகோணமலை அருள்மிகு ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலயத்தின் கும்பாபிஷேக நிகழ்வுகள் நேற்றுக் காலை பக்திபூர்வமாக நடைபெற்றன.

புதிதாக அமைக்கப்பட்ட 66 அடி உயரமான இராஜகோபுரம், கும்பாபிஷேகக் கிரியைகளினைத் தொடர்ந்து கண்ணைக் கவரும் வகையில் காணப்பட்டது.

கும்பாபிஷேகத்தை ஒட்டிய பூசை வழிபாடுகளில் நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் இருந்து வந்த ஆயிரக் கணக்கானோர் கலந்து கொண்டனர்.

தொடர்ந்து 45 தினங்கள் மண்டலாபிஷேகம் நடைபெறவுள்ளது.

(ஐ-7-145)

## நாட்டில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வடிவமே யுத்தம். யுத்தத்தின் மூலம் நிலங்களைக் கைப்பற்றுவதும் ஒரு வகையான கொள்ளைதான். இது தேவையற்ற ஒன்று. யுத்தத்தை நிறுத்தினால் அதற்குச் செலவாகும் பெரும் நிதியை நாட்டின் அபிவிருத்திக்குப் பயன்படுத்தலாம்" என்றும் றொனி டிமெல் அப்பேட்டியில் மேலும் கூறினார்.

(ஐ-3)

## பல்கலைக்கழக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கிரஸின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அ.விநாயகமூர்த்தி பொலீஸ் அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டதை அடுத்து மாணவர்கள் 10 பேரும் நேற்று மாலையே விடுவிக்கப்பட்டதாக ஒரு செய்தி தெரிவித்தது.

(ஐ-3)

## புலிகளை பிரிட்டன்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அப்பாவி மக்கள் பெரும் எண்ணிக்கையில் கொல்லப்பட்டும் -

வரவு செலவுத் திட்டத்தில் 20 சதவீதம் யுத்தத்துக்கு செலவு செய்யப்பட்டும் வரும் நாட்டுடன் ஐரோப்பிய ஒன்றியம் உறவுகளை வைத்திருக்க முடியாது. வெறும் தொடர்புகளை மட்டுமே பேணமுடியும்.

இலங்கையில் அனைத்துத் தரப்பினருடனும் உறவுகளை வைத்திருக்கவே நாம் விரும்புகின்றோம். சிங்கள, தமிழ் மக்கள் என்ற வேறுபாடு காட்டமுடியாது. இராணுவ கட்டுப்பாட்டுப் பிரதேசம், இராணுவக் கட்டுப்பாடற்ற பிரதேசம் என்றும் வேறுபாடுகாட்டவும் முடியாது. அடுத்த இரு வாரத்தில் இலங்கைக்குச் செல்லும் சமயம் யாழ்ப்பாணத்துக்குச் செல்லவுள்ளேன்.

விடுதலைப் புலிகள் அறிவித்துள்ள யுத்தநிறுத்தத்தை வரவேற்கின்றோம். அந்த யுத்தநிறுத்தத்தை இலங்கை நிராகரித்ததைக் கண்டிக்கின்றோம்.

விடுதலைப்புலிகள் அமைப்பை பிரிட்டன் தடைசெய்யும் என வதந்திகள் பரப்பப்படுகின்றன. அவ்வாறு செய்யக்கூடாது என்பதே எமது நிலைப்பாடாகும்.

அந்த அமைப்பை பிரிட்டன் தடைசெய்தால் நோர்வேயின் சமாதான முயற்சியில் பாதிப்பு ஏற்படும்.

இலங்கை அரசாங்கம் போர் முனைப்புக்களைக் கைவிட்டு உண்மையான சமாதானத்தைக் கொண்டு வர முயற்சி செய்யவேண்டும் - என்றார்.

(ஐ-3-7)

## மட்டு.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்னர் இரு படகுகளை ஒன்றாக இணைத்து இவ்வாவி ஊடான போக்குவரத்துச் சேவைகள் நடைபெற்று வந்தன. அப்படகு சேதமடைந்ததையடுத்து சிறிய தோணிகள் போக்குவரத்துக்கு பயன்படுத்தப் பட்டு வருகின்றன.

சடலங்கள் நேற்று புதன்கிழமை மீட்கப்பட்டு இறுதிக்கிரியைகள் நடைபெற்றன.

இந்த வாவியில் கடந்த மூன்று மாத காலத்தில் இடம்பெற்ற மூன்றாவது படகு விபத்துச் சம்பவம் இதுவாகும்.

இச்சம்பவங்களில் இதுவரை 10 பேர் உயிரிழந்துள்ளனர். (ஐ-7-21)

## புலிகளை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த அமைப்புகளை தடைசெய்யும் நடவடிக்கைகளை பிரிட்டிஷ் உள்துறை அமைச்சே மேற்கொண்டு வருகிறது.

விடுதலைப் புலிகள் அமைப்பைத் தடைசெய்வதைத் தடுக்கும் முயற்சியாக பிரிட்டிஷ் வெளிவிவகார அமைச்சு உள்துறை அமைச்சுக்கு நெருக்குதல்களை கொடுத்து வருவதாக லண்டனில் செய்தி வெளியாகியுள்ளது.

விடுதலைப் புலிகளை தடைசெய்யும் நடவடிக்கைக்கு உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் உள்ள தமிழர் சமூகங்களில் இருந்து கடும் எதிர்ப்புக் கிளம்பியிருப்பதை அடுத்து புலிகள் தொடர்பான கொள்கையில் கடும போக்கைத் தணித்து, சில நியந்தனைகளின் அடிப்படையில் குறிப்பிட்ட காலப்பகுதிக்கு புலிகள் அமைப்பை தடைசெய்யும் அறிவிப்பு வெளியிடப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுவதாக லண்டன் தகவல் ஒன்று தெரிவித்தது.

ஏனைய ஐந்து அமைப்புகளையும் தடைசெய்து விட்டு புலிகள் மீதான தடை நடவடிக்கையை தற்போதைய சமாதான முயற்சிகளை கருத்தில் கொண்டு சிறிதுகாலத்துக்கு ஒத்திவைக்க பிரிட்டிஷ் அரசு முடிவுசெய்யும் வாய்ப்பு உண்டு என்று மற்றொரு தகவல் தெரிவித்தது.

(ஐ-3)

# நூலக ஆசிரியர்களை நியமிக்க அடுத்தவாரம் நேர்முகப்பரீட்சை

திருகோணமலை,பெப்.8

பட்டதாரி ஆசிரியர்களை நூலக ஆசிரியர்களாக நியமிக்கும் திட்டத்தின் கீழ் யாழ்.மாவட்டத்தில் இருந்து விண்ணப்பித்தவர்களுக்கான நேர்முகப் பரீட்சைகள் அடுத்த வாரம் யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளன.

இதற்கான ஏற்பாடுகளை மாகாணக் கல்வித் திணைக்களம் மேற்கொண்டு வருகிறது.

நேர்முகப்பரீட்சையை நடத்துவதற்கென அதிகாரிகள் அடங்கிய குழு ஒன்று விரைவில் யாழ்ப்பாணம் வர இருப்பதாக வடக்கு - கிழக்கு மாகாணக்கல்வித் திணைக்களத்தைச் சேர்ந்த உதவிக் கல்விப் பணிப்பாளர் ந.அனந்தராஜ் தெரிவித்துள்ளார்.

தெரிவு செய்யப்படும் நூலக ஆசிரியர்களுக்கு உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் விசேட பயிற்சிகள் வழங்கப்படும் எனவும் மேலும் தெரிவிக்கப்பட்டது.

(ஐ-7-145)

## அடுத்த....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொழும்பு வருகின்றார். அவருடன் கலந்துரையாடிய பின்னர் பேச்சுக்கான திகதி நிர்ணயம் செய்யப்படும்.

பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கு இரு தரப்புகளுக்கும் இடையில் இணக்கநிலை ஏற்பட்டுவிட்டது. எப்போது ஆரம்பிப்பது என்பது தொடர்பான முடிவே எடுக்கப்படவேண்டியுள்ளது - என்றார்.

அதேவேளை -

புலிகளுடன் பேச்சுக்களை ஆரம்பிப்பது தொடர்பாக ஜனாதிபதி நேற்று சிரேஷ்ட அமைச்சர்களுடன் கலந்துரையாடினார். அமைச்சர்களான பேராசிரியர் பீரிஸ், பட்டி வீரக்கோன், அலவி மௌலானா ஆகியோர் இந்த சந்திப்பில் கலந்து கொண்டனர்.

பேச்சுக்கள் தொடர்பான விவரங்களை வெளியிடுதல், பேச்சுக்கான ஒருங்கமைப்புப் பணிகளை மேற்கொள்ளுதல் ஆகியவற்றுக்குப் பொறுப்பாக நீதி அமைச்சர் பட்டி வீரக்கோன் நியமிக்கப்பட்டிருப்பதாக ஒரு தகவல் தெரிவித்தது. (ஐ-3)


"இன்னுயிர் நீப்பினும் நந்தமிழ் காப்போம"

"தமிழ்மொழியின் மணிவிழா சிறக்க தந்த அன்புக்கு ஆதரவுக்கு"

நன்றி

(செந்தமிழ்த் திலகம் பேராசிரியர் அ.சண்முகதாஸ்)

மங்கல இசை பொழிந்து விளக்கேற்றி
மாண்புடன் தமிழ் வேத வாழ்த்திசைத்து
பாங்குடன் அருளாசி தந்து வாழ்த்துரைத்து
பாமாலை பாடி மலர்வெளியிட்டு முதற்பிரதி பெற்று
ஆங்காங்கே நூல் ஆய்வுரை நிகழ்த்தி ஏற்புரையேற்று
எழிலான "செந்தமிழ்த்திலகம்" விருதினை ஆக்கி மலர்
வாங்கி மன்றில் கலை நிகழ்வு மாண்புடன் வழங்கி
வளமுடன் மணிவிழா நிகழ மண்டபத்தைத் தந்து
ஓங்கி ஒலித்திட விழாச் செய்தியை
உலக வானொலியில் பரப்பி
ஊக்கந்தந்து விளம்பரம் நன்கொடை வழங்கி
மாண்புடன் நூல்களை அச்சேற்றி
பத்திரிகையில் செய்தி வழங்கி
மணி விழாக்காண மண்டபம் நிறைய எல்லோரும் கூடி
நீங்காத அன்புடன் பேராசிரியரை கௌரவித்து
நினைவுப் பரிசில் வழங்கி வணங்கி வழிபட்டு
நாங்கள் எடுத்த மணிவிழாவை மங்கலமாக்கிய
நற்றமிழ் இதயங்களுக்கு நல்வாழ்த்தும் நன்றியும்.

மதுரகவி. காரை.எம்.பி.அருளானந்தன்
செயலாளர்,
பேராசிரியர் அ.சண்முகதாஸ் மணிவிழா அமைப்பு
(C/15206) யாழ்ப்பாணம்.



யாழ்., பேராதனைப் பல்கலைக்கழக
வெளிவாரிப்பட்டப் படிப்புகள்
பொருளியல்
S.வரதராஜன்
G.A.Q, 1st in Com. 2002
சனி, ஞாயிறு 12.00 (ப.நே.)
B.A. Final, B.Com. PART II
சனி, ஞாயிறு 7.15a.m. (ப.நே.)
ஆரம்பம்:- 10-02-01 சனி
பொருளியற் கல்லூரி
யாழ்ப்பாணம்.
(83841)



நேற்றைய நிகழ்வுகள்.....
இன்று நவீன தொழில் நுட்பத்தில்.
உங்கள் மங்கள நிகழ்வுகளைக் கொண்ட பெறுமதிமிக்க வீடியோ கசற்றுகள் "பங்கசு" மூலம் பழுதடைந்துவிடும் என்ற கவலையை இனி விட்டுவிடுங்கள்
உங்கள் வீடியோ கசற்றுகளை
"TATA VIDEO" இலிருந்து நேரடியாக டிஜிட்டல் CD இல் பதிவு செய்து தருகிறோம்.
உங்கள் கசற்றுகளை காலங்காலமாக DIGITAL CD யில் பேணிப் பாதுகாத்திட
வீடியோ விமல்
9/1 வெள்ளாந்தெரு. யாழ்ப்பாணம் T.P - 2466
(சி15209)



J.T.I. இன் புலமைப் பரிசில் 2001
மேற்படி புலமைப்பரிசில் மூலம் தெரிவு செய்யப்பட்ட பரீட்சார்த்திகள் தமது பதிவுகளை 09-02-2001 இற்கு முன்னர் செய்து கொள்ளவும்
புதிய பயிற்சிகள் ஆரம்பம்:
10-02-2001 (சனி,ஞாயிறு நாள்களில்) 10 a.m.
14-02-2001 (கிழமை நாள்களில்) 4 p.m.
குறிப்பு:- புலமைப்பரிசிலில் இணையத் தவறியவர்கள் இப்பிரிவில் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள். இவர்களுக்கு கட்டணத்தில் இருந்து 25% கழிவு வழங்கப்படும்.
A/L 2001 க்கு பின்னர் பயிற்சி நெறிகளை தொடர இருக்கும் பரீட்சார்த்திகள் தமது பதிவுகளை 09-02-2001க்கு முன்னர் பதிவு செய்து கொள்ளவும்.
JAFFNA TECHNICAL INSTITUTE
No.7, Palaly Road,
Jaffna
(இணுப்பையடிச் சந்தி அருகில்)
- DIRECTOR.
(C/15167)



தரம் 10
மாணவ மணிகளே!
உங்கள் கவலையை
விட்டெறியுங்கள்
உங்களுக்காகவே
வரலாறும் சமூகக்கல்வியும்
கணிப்பீட்டு முறைக்கு ஏற்றது
வெளிவந்துவிட்டது
ஏக விநியோகஸ்தர்
மக்மிலன் புத்தகசாலை
யாழ்ப்பாணம்.
ஆசிரியர்: எஸ்.ஐங்கரன்
(பிரதிகளுக்கு முந்துங்கள்)
(83747)



எக்சலன்ற்
விக்கினேஸ்வரா வீதி, நெல்லியடி.
O/L
கணிதம்
By: கேதீஸ்
பிரத்தியேக வகுப்பு
10.02.2001 சனி
பிரிவு I, II
காலை 6 மணி, மாலை 5 மணி
(83872)



புதிய பிரமிட் வீடியோ CD வெளியீடுகள்
ராஜ்சேகர், பப்லு
✷ தர்மவம்சம்
(இப்படப் போஸ்ரர் விற்பனைக் குண்டு)
பிரகாஷ்ராஜ் நடித்த
✷ காதல் வெண்ணிலா
புதிய பழைய போஸ்ரர்கள் வாடகைக்கு உண்டு.
மாதவனின்
✷ மின்னலே
(திரையரங்கிற்கு முன்னுரிமை)
விஷ்ணு வீடியோ
கே.கே.எஸ். வீதி,
கோண்டாவில்.
(சி15211)



கைகொடுத்தல்



96/97 காலப்பகுதியில் காணமல்போனோரின் குடும்பங்களைச் சேர்ந்ததெரிவு செய்யப்பட்ட சிறார்களிற்கு நிதி உதவி வழங்கும் நிகழ்வு.
இடம்: கைலாசபதி கலையரங்கு
யாழ் பல்கலைக்கழகம்.
காலம்: 08-02-2001, வியாழக்கிழமை
பி.ப 3மணி
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்,
பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம்
யாழ்ப்பாணம்


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 361அம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 08. 02. 2001இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.